'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் ''

மலர் 3 ● இதழ் 3

# சிவநெறி
# SIVANERI
## முத்திங்கள் சஞ்சிகை

பவ வருஷம் ● 1994 சித்திரை வைகாசி ஆனி

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு



சுமார் ஐந்து நூற்றாண்டுகளாக ஜலவாசம் செய்த

## அழகு முருகனின் அற்புத சிலை

நூதனசாலையில் இரும்புக் கூண்டுக்குள்ளே சிறைப்படுத்த வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபா 10.00

# நற்சிந்தனைகள்

தோல்வியைக் குறித்து மனமே, நீ துயரடையாதே. தோல்வியினின்று நீ கற்றுக் கொள்ள வேண்டிய தனிப்பாடத்தையும், நீ பெறுகிற ஞானத்தையும் நல்லறிவையும், வேறு யாருமே உனக்கு வழங்க முடியாது வீழ்ச்சியைத் துருவி ஆராய்ந்தால் அங்கு மெய்யறிவு மிளிரக் காணலாம்.

★

மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு வாழ்வில் மேன்மையும், கீழ்மையும் வந்தடைகின்றன. நரகத்தை சுவர்க்கமாக மாற்றுவது மனது சுவர்க்கத்தை நரகமாக்குவதும் மனது, பண்பட்ட மனதும், சீரிய வாழ்வும் ஒன்றே.

★

மனது உண்டு பண்ணுகிற இன்பதுன்பம் வெளியுலகில் இருப்பவை போன்று தென்படுகின்றன. மனதுகொடுக்கிற மதிப்புக்கு மேல் புறவுலகுக்கு மதிப்பில்லை.

★

துன்பக்கண்ணீர் உள்ளத்தைத் திருத்திச் செப்பனிடுகிறது. துயரம் என்னும் மழையில் மூடப்பெற்ற உள்ளம் ஞானவிளைவுக்கு ஏற்றதாகிறது. விசாரம் உள்ளத்தை உழுதபின்னர், ஞானோதயம் உண்டாகிறது

எல்லையற்ற, பெருமை மிக்க, சிறப்பான இந்த அன்பால் பிரபஞ்சமே பொங்கிப் பெருகிப் பரப்பது வரை, தெற்கிலும், வடக்கிலும் கிழக்கிலும், மேற்கிலும், விண்ணிலும், மண்ணிலும் தமது அன்பு வெள்ளத்தைப் பாய்ச்ச வேண்டும்' என்று வரும் புத்தரின் செய்தியின் பகுதி உங்கள் நினைவுக்கு வருகிறதா அந்த உணர்ச்சி கொள்ளும்போதே நீங்கள் உண்மையான தோற்றப் பொலிவைப் பெறுவீர்கள், இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஒருவரே. அற்ப விஷயங்களை உதறித் தள்ளுங்கள், பெரிய எல்லையற்ற ஒன்றைப் பெறுவதற்காகச் சாதாரண விஷயங்களை விட்டுவிடுங்கள்.

★

தேவையானதை வைத்துத் தேவையில்லாததை விட்டுவிடும் இயற்கையான அறிவு சகல ஜீவராசி களிடத்தும் இயல்பாக அமைந்திருக்கிறது. மனிதனில் அது விவேகம் அல்லது பகுத்தறிவு என்ற சிறப்பான குணத்துடன் இருந்தும் பேராசையால் அது அறியப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்.



உ
சிவமயம்



## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

வெந்த நீறருங்கலம் விரதிகட்கெலா
மந்தணர்க் கருங்கலம் அருமறையாறங்கற்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

திருக்கோணேசப் பெருமானின் திருவருட் பேற்றால் உருவானதே திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை. இப் பேரவை உருவாகும் பொருட்டு சிவனருளால் அவதரித்த பெருமகனே திரு செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்கள். சிவனருளால் பரிபாலிக்கப்படும் இப்பேரவையின் சாதனையில் ஒன்று பேரவையினால் வெளிவரும் முத்திங்கள் ஏடு இவ்வேடு தாங்கி வரும் பெயரும் சிவநெறியேயாகும். இப்பேரவையின் ஒட்டு மொத்தமான குறிக்கோளேசிவநெறியில் நின்று சமய சமுதாய சேவை ஆற்றுவதேயாகும்.

சிவநெறிக்கே தன்னை அடிமையாக்கிக் கொண்ட திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளராகவிருந்து இன்றும் மக்கள் சேவைக்கே தன்னை அர்ப்பணித்துள்ளார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர் இந்து சமய நெறியின் மூலம் இளைஞர்களை வளர்த்து இந்து சமயத்தின் இணையற்ற நெறிகளை உலகெல்லாம் பரவச் செய்ய வேண்டும் என்னும் கொள்கையாளர்.

உண்மை, நேர்மை, உறுதி என்பனவற்றைத் தாரகமந்திரமாகக் கொண்டு இந்து சமயத்தினர் எழுச்சிக்காய்த் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். தனக்குச் சரியெனப் பட்டதை துணிகரமாக எடுத்துச் சொல்பவர். தவறான கருத்து யாரிடமிருந்து வந்தாலும் அதைச் சுட்டிக்காட்டி திருத்த முயல்பவர். அதனால் வரும் எந்த எதிர்ப்பையும் தாங்கிக் கொள்ளும் வல்லமை மிக்கவர். போற்றுதலைக் கண்டு மயங்கியதும் இல்லை. தூற்றுதலைக் கண்டு மனந்தளர்வதுமில்லை. அஞ்சாமையாகிய தன்மையை அவரது உடைமையாகக் கொண்டவர்.

பட்டத்திற்காகவும் பதவிக்காகவும் சங்கங்களை ஏற்படுத்திப் பின் அவை இருந்த இடங்களும் இல்லாத நிலையை எமது நாட்டின் பல பாகங்களிலும் காண்கின்றோம். தம்மை வளர்த்துக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தி தங்களை எல்லா வகையிலும் வளர்த்துக் கொண்டவர்களும், தம்மை சேவையாளர் என்று தம்பட்டமடிக்கும் போலிகள் எம்மத்தியில் பலர் உளர். மக்களின் துன்பங்களில் திணையளவேனும் பங்கு கொள்ளாதவர்கள். அவர்கள் நிலை உயரப்பாடு படாதவர்கள் எவ்வாறு மக்கள் சேவையாளர் என்று கூறமுடியும்.

உண்மை, நேர்மை, உறுதி என்பவற்றை திடமாகக் கொள்ளாத எவரும் சிறப்புடன் வாழ்ந்ததில்லை. உண்மைச் சேவையாளரைச் சமுதாயம் என்றும் மறந்ததுமில்லை. உண்மைச் சேவையால் உயர்ந்த உத்தமன் தான் ''சிவஞானச்செல்வர்'' திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்கள். அன்னாரைச் சிவநெறி போற்றுகின்றது. வாழ்த்துகின்றது. உண்மை சேவை மென்மேலும் சிறப்படையச் சிவஞானச் செல்வர் என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்த இந்துக்கலாச்சார மாண்புமிகு அமைச்சருக்கும் அமைச்சுக்கும் பெரு நன்றியை மன நிறைவோடு சிவநெறி தெரிவித்துக் கொள்கின்றது.

''ஆசிரியர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வழிபாடு

சிவநெறிச்செல்வர், அறநெறி அன்பர் **திரு வே. ச. சுப்பையா**

இந்துக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கும் போதும் முதலில் விநாயகரை வணங்குவர் விநாயகர் என்றால் வி + நாயகர் என விரியும். 'வி' என்பது ''இல்லை'' நாயகர்? தலைவன் ஆகவே விநாயகர் எனக் கூறும்போது தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத ஏகநாயகன் எனப் பொருள்படும். சிவ கணங்களுக்கெல்லாம் முதல்வன் கணநாதன் அப்படியாயின் சிவன் உமை இவர்களிலும் மேல்லானவரா? விநாயகர் எனும் கேள்வி எழும். ஆம் சிவனுக்கும் உமைக்கும் விவாகம் நடந்தபோது விநாயகரைச் சாட்சி வைத்தே திருக்கல்யாணத்தைச் செய்தனர். என வேதங்கள் கூறுகின்றன.

விநாயகர் ஆதி அனாதியான பிரணவவடிவினர். அகார, உகார, மகார ஒலிகளில் வரிவடிவமான ''ஓம்'' என்பதே பிரணவம். சிவத்திலிருந்து நாதமும் சக்தியிலிருந்து விந்துவும், சேர்ந்ததே விநாயகர். நாதத்தின் வடிவம் நீளமான தடிபோன்றது விந்து வட்டவடிவமானது இவை இரண்டும் சேர்ந்தே (உ) பிள்ளையார்சுழி. இதை நம் அருணகிரிநாதரும் ''நாதவிந்துக்கணாதி நமோநம'' என்று அனாதியானதும் உலக உற்பத்திக்கு மூல காரணமுமான பிரணவத்தைக் குறிப்பிட்டார். விநாயகரின் வடிவம் ஆணும் பெண்ணும் சேர்ந்த வடிவம், கொம்பு உள்ள இடப்பக்கம் ஆண் கொம்பில்லாத வலப்பக்கம் பெண். இன்னும் விநாயகர் நம் உடம்பிலுள்ள ஆறு ஆதாரத்தானங்களில் மூலாதாரத்தில் ஆனந்தமய கோச அதிபதியாக விளங்குகின்றார்.

விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரனுக்கு யானைமுகம், ஒரு கொம்பு, இரண்டு செவி, மூன்று விழி, நான்குபுயம், ஐந்துகரம், பரஞானம், அபரஞானம் என்னும் இரு பாதங்கள் பிரணவப் பொருள்.

''பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரம்
சரணி அற்புதமலர் தலைக்கணிவோமே''

என்று ஆன்றோர் கூறினர். அவருடைய பெரிய வயிற்றில் அண்டசராசரங்களும் அடங்கியிருக்கின்றன. இவர்தன் ஐந்து கரங்களாலும் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு பஞ்சகிருத்தியங்களையும் செய்கிறார். விநாயகர் வெவ்வினைகளை வேரோடு அறுத்துவிடுவார் என்பதை

''விநாயகனே வெவ்வினையைவேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மை
யினால் கண்ணிற் பணிமின் கனிந்து''

என்றும் கபிலதேவரின் மேற்படிப் பாடலின் மூலம் அறிகின்றோம் விநாயகர் மிகவும் நுண்ணறிவும் புத்திக் கூர்மையும் தரவல்ல தெய்வம். மெய்ஞானத்தைத் தரவல்லவர்.

''சொற்பதங்கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறு''

தன்னை வழிபடும் அடியார்களுக்கு வரும் துன்பங்கள் விக்கினங்கள் யாவையும் போக்கி அருள்புரிவார். ஆதியில் கஜமுகாசுரன் என்பவன் இறவா வரம் பெற்று தேவர்களையெல்லாம் அடக்கி ஒடுக்கித் துன்பப்படுத்தினான் தினமும் ஒவ்வொருவரும் காலை மதியம், இரவு மூன்று வேளையும் தனித்தனி ஆயிரத்தெட்டுத் தோப்புக்கரணம் போடும்படி பணித்தான். இதனால் வேதனையடைந்த தேவர்கள் சிவபெருமானை வேண்டுதல் செய்தனர். அவரும் பிரணவப் பொருளான விநாயகரைத் தோற்றுவித்தார் என்பதை,

''பிடியதனுருகுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே''

இத் தேவாரப் பாசுரத்தால் அறியலாம். விநாயகர் கஜமுகனை எதிர்த்தார் அவன் விட்ட ஆயுதங்களையெல்லாம் அழித்தார் அவர் விட்ட படைக்கணங்களும் அவனை ஒன்றும் செய்யவில்லை அவன் சாகாவரம் பெற்றவன். உடனே விநாயகர் தனது தந்தத்தை முறித்து கஜமுகசுரன்மேல் ஏறினார் அவன் பயந்து நடுங்கி ஓர் சிறிய மூஷிகம் (எலி) ஆனான். விநாயகரும் அவ் எலியின்மேல் அமர்ந்து அதை அடக்கித் தனக்கு வாகனமாக்கி ''ஆகுவாகனர்'' என்னும் பெயரையும் பெற்றார் அன்றியும் தேவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மூஷிக வாகன மோதக அஸ்த
சாமரகர்ண விளம்பிதசூத்திர
வாமனரூப மகேஸ்வர புத்திர
விக்கின விநாயக பாத நமஸ்தே''

என்று வணங்கினர். விநாயகர் மகிழ்ந்தார் தாங்கள் கஜமுகாசூரனுக்குப் போட்ட தோப்புக்கரணத்தை விநாயகப்பெருமானுக்குப் போட விரும்பினர். அவரும் மூன்று முறை தோப்புக்கரணமிட்டால் போதும் என்று கூறினார் அவர்களும் அவ்வாறு செய்து அவர் அருளைப் பெற்றனர். நாமும் விநாயகருக்கு மூன்று முறை தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும் அவர் கிருபையைப் பெற வேண்டும்.

வியாச முனிவருக்கு பிரமதேவன் பாரதக் கதையை அறிவித்து அதை மகாமேருமலையில் எழுதும்படி கூறினார். வியாசமுனிவரும் விநாயகரை வணங்கினார் அவர் அருள் கிடைத்தது வியாச முனிவரும் பாரதக்கதையைக் கூற விநாயகப்பெருமானும் தான் கஜமுகாசூரனை வதைக்க முறித்த தந்தத்தினால் மகாமேருமலையில் எழுதி உதவினார்.

''நீடாழி உலகத்துமறை நாலொடைந்
தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார
தஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வெங்கூர்
எழுத்தாணிதான்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு
கூர்வாமரோ

என்னும் பாரதக் காப்புச் செய்யுளால் அறியலாம் பெரிய முனிவர்களுக்கும் விநாயகர் அருள் புரிந்தார். தேவர்களுக்கும் உதவினார். தான் வளர்த்த மலர்க்கா மழையின்றி வாடியதால் இந்திரன் விநாயகரை வழிபட்டான் அவரும் அவன்மேல் இறக்கம் கொண்டு காக்கை வடிவாகச் சென்று அகஸ்தியர் கமண்டலத்தில் கொண்டுவந்த கங்கை நீரைத் தன் அலகினால் கவிழ்த்துக் காவேரி நதியை உண்டாக்கி இந்திரனது பூஞ்சோலைக்கு நீர் பெருக்கச் செய்தார் விநாயகர்.

'.வரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருகுவார் கடல்பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளும் தலைக்கணி யாக்குவோம்''

என்பது பாடல்

சிவபெருமானிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெற்று வந்த இராவணனிடம் இடைப்பையன் வடிவத்தில் சென்று அதைப்பெற்று பூமியில் நிலைபெறச் செய்து தேவர்களுக்கு உதவினார் விநாயகர் அதனால் கோபமடைந்த இராராவணன் விநாயகப் பெருமான் தலையில் குட்டினான். அவர் தன் சுயரூபத்தைக் காட்டி அவனது கோபத்தை அடக்கினார். அவன் பணிந்தான் இராவணன் ஞாபகமாக தங்கள் தலையில் குட்டி, கும்பிடுகிறவருக்கு விநாயகர் திருவருள் புறிகிறார் நாமும் அவரைக் கும்பிட்டு நம்தலையில் குட்டி வேண்டியவரம் பெறுவோமாக.

இவ்வுலகில் நாங்கள் எந்தக் காரியத்தைச் செய்யும்போதும் முதலில் விநாயகருக்கு வணக்கம் செலுத்திய பின்னே ஆரம்பிக்கின்றோம், அவரே ஆதியோடானாதியான பரம்பொருள். அவரை வணங்காது செய்யப்படும் காரியங்கள் தடையேற்பட்டு தோல்வியில் முடியும்.

சிவபெருமான் முப்புர அசுரர்களை அழிக்கப் புறப்பட்ட போது அவர் விநாயகப் பெருமானை நினைக்காத படியினால் அவர் ஏறிய தேரில் அச்சையே முறியச் செய்தார். பின் சிவபெருமான் பிரணவப் பொருளான ஐங்கரனை வணங்கித் தேரில் ஏறி முப்புரத்தை அழித்தார். இதை நம் அருணகிரி நாதரும் தமது திருப்புகளில்,

''முப்புரமெரி செய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா''

என்று விநாயகப் பெருமானின் வீரத்தின் பெருமையை விளக்கினார். ஔவைப் பிராட்டியாரை விநாயகப் பெருமான் கைலாயம் அனுப்பியபோது யானையிலும், குதிரையிலும் முறையேறிவந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமான் நாயனாரும் தங்களுக்குப் பின் புறப்பட்ட ஔவையார் தங்களுக்கு முன் கைலாயம் வந்து சேர்ந்தது அதிசயத்தைக் கண்டு வியந்த பொழுது ஔவைப்பாட்டியாரும் விநாயகப்பெருமானை அன்போடு வழிபட்டால் எல்லாருக்கும் எல்லா அருளும் கிடைக்கும் என்னும் பொருள்பட,

''மதுரமொழி நல்லுமையால் மைந்தன்
மலர்ப்பதத்தை
முதிர நினைத்தவர்க் கரிதோ முகில்போல்
முழங்கி
அதிர நடந்திடும் யானையுந்தேரும்
அதன்பின்னேவரும்
குதிரையுங்காதம் கிழவியுங் காதம்
குலமன்னனே''

என்று கூறினார். அவர்களும் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானை அன்போடு வழிபட்டனர். நாமும் அவரைத் திரிகரண சுத்தியாய் வழிபட்டு அவரருள் பெறுவோமாக.

''மண்ணுலகத்தில் பிறவி மாசர
எண்ணிய பொருளெலாம் மெளிதின்
முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து
போற்றுவோம்''

— பெரியபுராணம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பற்றிய திருமந்திர விளக்கம்

— சி. இராமநாதன் திருமூலர்சங்கம் —

மணிவாசக சுவாமிகள் பாடியிருப்பது போல் நாம் இவ்வுலகில் புல்லாய், பூடாய், பாம்பாய், பறவையாய், பல்மிருகமாய் பல பிறப்புக்கள் முன் எடுத்து இப்போ கிடைத்தற்கரிய மானிடப் பிறப்பு பெற்று வாழ்கின்றோம். இச்சொற்பகால உலக வாழ்வில் நாம் சேகரிக்கும் அறிவை திருமந்திரம் பேயறிவு என்று கூறுகின்றது. திருவள்ளுவரும் திருக்குறளில் அக்கருத்தையே கூறுகின்றார்.

140 - உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்.

266 தவம் செய்வார் தம்கருமம் செய்வார்மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு.

02 - கற்றதனாலாய பயனென்கொல்
வாலறிவன் நற்றாள் தொழாரெனின்.

திருமூலரும் பல திருமந்திரங்களால் நாம் உடம் பெடுத்ததின் நோக்கத்தையும் உயிர் உடம்புள் நிற்கும்பொழுதே கற்கவேண்டிய அறிவையும் விளக்குகின்றார்.

''உடலிற்றுவக்கிய வேடம் உயிருக்காக
உடல்கழன்றால் வேடம் உடனே கழரும்
உடல் உயிர் உண்மை ஓர்ந்துகொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே''

எம்மை இவ்வுலகில் உயிருடன் வைத்து சீவிப்பதற்கு காரணனாய் நிற்கும் பொருளை கற்று உணராதவனை மூடன் அதிமூடன் கோரவினை செய்த பாவி யென்று திருமந்திரம் விளம்புகின்றது.

''ஊன்அறிந்து உள்ளே உயிர்க்கின்ற
ஒண்சுடர்
தானறியான் பிள்ளை யார் அறிவாரே''

என்று திருமூலர் வியப்புறுகின்றார். நிற்கின்றபோதே நிலையுடையான் கழல் கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள் சொற்குன்றலின்றித் தொழுமின் தொழுதால் மற்றொன்றிலாத மணிவிளக்காமே

உயிர் உடலுள் நிற்கும்பொழுதே உயிரை அழியாத மெய்ப்பொருளைக் கற்று பாவங்களை அறுங்களென்று நேர் உபதேசமாக அளிக்கின்றார். உயிர் இயங்கும் ஐந்தெழுத்தை குறையாமல் ஓதி மெய்ப்பொருளின் சோதியாய் விளங்கலாம்.

2596 - எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு
எல்லாமறிந்தும் இலாபமங்கில்லை.
எல்லாமறியும் அறிவினை
நானெண்ணில்
எல்லாமறிந்தஇறையெனலாமே

எமக்குள் இயங்கும் பிரணவப்பொருளே ஆதிபராசக்தியாய் பிரபஞ்சத்தைப் படைத்து அறிவை ஊட்டி நிற்கின்றது.

உற்றபிறப்பும் உறுமலமாவதும்
பற்றிய மாயாப் படலமெனப் பண்ணி
அத்தனை நீயென்று அடிவைத்தான்
பேர் நந்தி
கற்றன விட்டேன் கழல்பணிந்தேனே.

அத்தன் - மெய்ப்பொருளை இறைவன் நீயென்று சொல்லி கருவில் மிதித்த கமலப் பாதத்தில் அடி வைத்தான். கற்றபுறக் கல்வியை விட்டு மெய்ப்பொருளைக் கற்பதற்கு கமலப்பாதங்களைப் பணிந்தேன்.

''தன்னை அறிவது அறிவாகும் அஃதன்றி
பின்னை அறிவது பேயறிவாகுமென்றும்
தன்னை அறிய தனக்கொரு கோடில்லை

என்றும் பல பாடல்களால் விளக்குகின்றார். இதுவே உண்மையான பிரயோசனமான கல்வி. கீழ் காணும் திருமந்திரங்கள் கல்வியின் அர்த்தத்தை விளக்குகின்றன.

290 - குறிப்பறிந்தேன் உடல் உயிரது கூடிச்
செறிப்பறிந்தேன் மிகுதேவர்பிரானை
மறிப்பறியாது வந்து உள்ளம்
புகுந்தான்
கறிப்பறியா மிகுங்கல்வி கற்றேனே.

செறிப்பு - கலப்பு, மறிப்பு - தடை
கறிப்பு அறியா - அபகரிக்க முடியாத

291 - கற்றறிவாளர் கருதியகாலத்து
கற்றறிவாளர் கருத்திலோர்
கண்ணுண்டு
கற்றறிவாளர் கருதி உரை செய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே

உரை - ஐந்தெழுத்தோதல்
கயலுள - மூன்றாங்கண்ணில்
ஒளியாய் நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதப் பூசையும் அதன் பலன்களும்

— செல்வி மயூரதி அமிர்தலிங்கம் —

ஆலயங்களிலே நடைபெறுகின்ற நித்திய பூசைகளைப் போன்று வருடந்தோறும் வருகின்ற ஒவ்வொரு மாதமும் இடம்பெறும் பூசைகளை மாதப் பூசை என அழைக்கலாம். இம்மாதங்களை பல்வேறாகப் பிரித்து அந்தந்த மாதங்களிலே சிறப்பான பூசை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மாதப் பிறப்பு ஆலயங்களிலே சங்கிராந்தி என்ற பெயரிலே சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றன. மாதங்களிலே தை தொடங்கி ஆடி வரை உத்தராயணம் என்று பெயர் பெறுவன. உத்தரம் என்றால் வடக்கு, அயனம் என்றால் போக்கு அல்லது செல்லுதல். சூரியன் வடக்குச் செல்வதை இது குறிக்கும். உத்தராயணம் என்ற காலப்பகுதி தேவர்களுக்குப் பகற்காலம் என்று கூறப்படுகின்றது. ஆடித்தொடங்கி மார்கழிவரையுள்ள காலப்பகுதி தட்சணாயனம் என்று சொல்லப்படும். சூரியன் தெற்குத் திக்கை நோக்கி செல்வது என்பது இதன் பொருளாகும். தேவர்களுக்கு இக் காலப்பகுதி இராக்காலமாகும். மாதமொன்றுக்கு ஐந்து நாழிகை வீதமாக பன்னிரண்டு மாதங்களுக்கும் அறுபது நாழிகை பொழுதாக அவர்களிற்கு உரியதாகின்றது.

இவ்வரிசையிலே தநுர் மாதப் பூசையை விடியற் காலத்தில் சிவாகம விதிப்படி அனுட்டிப்பவர்கள் இம்மைமறுமைகளில் உயர்ந்த நிலையை அடைவர். அதாவது மார்கழி மாதத்திலே உதயகாலத்தில் ஒரு சந்தியில் செய்கின்ற பூசை ஆயிரம் நாட்களுக்கு சிவ பூசை செய்த பலனைத் தரும்.

மகர ராசியிலே சூரியன் வரும் தை மாதத்தில் நிகழும் பூசை மகர மாதப் பூசையாகும். ஆகமவிதிப்படி மகர மாதப் பூசை செய்தவர்கள் ஆயுள், செல்வம் ஆகியவற்றைப் பெறுவார்கள். இம்மாதத்திலே இந்துக்கள் ஆலயத்திலும் தமது இல்லங்களிலும் மிகச் சிறந்த வைபவங்களை நிகழ்த்துவது குறிப்பிடத்தக்கதாகும். ஆலயங்களில் சிறப்பாக யாக சாலைகளில் அக்கினி வளர்த்து விசேட ஹோமம் செய்தல் குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் ஸ்நபன (ஒன்பது) கும்பத்தினால் அபிசேகம் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

கும்ப ராசியிலே சூரியன் வருகின்ற மாசி மாதத்தில் பூசை செய்தவர்கள் பின்வரும் பலனை அடைவார்கள். ஞானம், புத்திர பௌத்திர விருத்தி, உடலாரோக்கியம், சிவ தீட்சாபலன் ஆகியவை குறிப்பிடத்தக்கது. இம் மாதப் பூசையின்போது அக்கினியிலே அரச சமித்தினாலே விசேட ஹோமம் செய்வது மிக முக்கியமாகும். இம்மாதப் பூசையின் போது சிறப்பாக ஐந்து நிறமுள்ள கம்பளத்திலேனும் அல்லது பருத்தி நூல் புடவையிலேனும் வாசனைத் திரவியங்களைப் பூசி அதை ஒரு பாத்திரத்தில் வைத்து வழிபட்டு ஆலயத்தை வலம் வந்து சிவலிங்கத்திலே அதனைச் சாத்தி வழிபடுதல் விசேடமாகும்.

சூரியன் மீன ராசியில் சஞ்சரிக்கின்ற பங்குனி மாதத்திலே உத்தர நட்சத்திரத்திலே தயிர் கொண்டு பூசை செய்தல் வேண்டும். அதாவது யாகசாலையிலே சிவனைப் பூசித்து நாயுருவி சமித்துக் கொண்டு ஹோமம் செய்து சிவனுக்கு விசேடமாகத் தயிரினால் அபிசேகம் செய்து பூசை செய்வதனால் நல்ல

---

294 - துணையதுவாய் வரும் தூய நற்சோதி
துணையதுவாய் வரும் தூய நற்சொல்லாம்
துணையதுவாய் வரும் தூய மலர்க் கந்தம்
துணையதுவாய் வரும் தூய நற்கல்வியே
நற்சொல்லாம் - ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தாம்

298 - பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது வெல்லாம் முதல்வன் அருள்பெறில்
சிற்ற விரகிற்கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பமுற்று நின்றாரே
சிற்ற விரகிற் - விடாமுயற்சியில்
வானவர் - யோகிகள்

பிரபஞ்ச சிருஷ்டியையும் உயிர்களின் தோற்றத்தையும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் ஆத்ம விமோசனம் பெறும் மார்க்கத்தையும் அறிந்து மெய்ப்பொருளை உணர்வதே கல்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியம், சிறந்த உடல்நலப் பேறு கிட்டும் என்பது ஆகம முடிவாகும்.

சூரியன் மேட ராசியில் வருகின்ற சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்திலே செய்யப்படுகின்ற மேட மாத பூசை மிகவும் முக்கியத்துவம் உடையதாகும். இப்பூசையினாலே செல்வச் செழிப்பு பலனாகக் கிட்டும். யாகசாலையிலே சிவனை வழிபாடு செய்தால் அக்கினியில் ஹோமம் செய்தபின்பு விதிப்படி மருக்கொழுந்து கொண்டு இறைவனுக்கு வழிபாடு செய்தால் அரசனுக்கு வெற்றியும், குழந்தைச் செல்வமும், உடல்நலம் ஆகியன கிட்டும். மருக்கொழுந்திற்கு ஒரு வரலாறு சோமசம்பு பத்ததியில் இடம்பெறுகின்றது. ஒரு காலத்தில் சிவனுடைய கோபத்தில் இருந்து தமணர் என்னும் பெயரையுடைய வைரவர் தோற்றம் பெற்றார். அவரால் அசுரர் ஆகியோர் அடக்கப்பட்டார்கள். அவரால் மகிழ்வுற்ற சிவன் அந்தத் தமன வைரவரை நோக்கி ''நீ பூமியிலே செடியாகத் தோன்றக் கடவாய்'' என அருளினார். ''உன்னுடைய தளிர் முதலியனவற்றால் எம்மைப் பூசிப்பவர்கள் உயர் பதவியடைவர்'' சித்திரைப் பூரணையிலே மருக்கொழுந்தாலான உச்சவத்தைச் சிவனுக்குச் செய்தவர்கள் மேற்கூறிய பலனையடைவர் என்பது மரபாகும். இதற்குத் தமனோற்சவம் எனப் பெயர்.

சூரியன் இடப ராசியில் வருகின்றபோது வைகாசி மாதத்திலே விசாக நட்சத்திரத்திலே கந்த பூசை செய்வது உகந்ததாகும். கந்தம் என்பது இங்கே சந்தனத்தைக் குறிப்பது. கஸ்த்தூரி, பச்சைக்கற்பூரம், பன்னீர் முதலியவாசனைத் திரவியங்களோடு கூடிய சந்தனத்தினால் பூசை செய்பவர்கள் அடையும் பலன் சாயுச்சிய பயனாகும். இம்மாதப் பூசையின்போது சிவனுக்கு வில்வம் சாத்தினால் ஹோமம் செய்தல் மிக முக்கியத்துவமாகும். குமார தந்திரம் வைகாசி விசாகத்திலே சுப்ரமணியருக்கு விசேட பூசையைப்பற்றிக் கூறுகின்றது.

சூரியன் மிதுன ராசியில் வருகின்றபோது ஆனியில் மூல நட்சத்திரத்தில் வருகின்றபோது பழங்களைக்கொண்டு பூசை செய்தல் வேண்டும். இந்த மாதத்திலே அக்கினிக்கு அரச சமித்தினால் ஹோமம் செய்தலும், பழாப்பழம், வாழைப்பழங்களினால் பஞ்சாமிர்தம் தயாரித்து மற்றும் பழங்களைச் சேர்த்து திருக்கோயிலில் வலம்வந்து மூலலிங்கத்திற்கு நைவேத்தியம் செய்தல் வேண்டும். ஆனிமாத பழப் பூசை செய்தவர்கள் தமது காரியங்களில வெற்றி பெறுவார்கள்.

சூரியன் கர்க்கடகத்தை அடைகின்ற ஆடி மாதத்திலே உத்தராட நட்சத்திரத்திலே சஷிர (பால்) பூசை செய்தல் வேண்டும். இம் மாதத்தின்போது யாகசாலையிலுள்ள அக்கினியிலே மாஞ்சமித்தினாலே அக்கினி வளர்த்து சிவனுக்குப் பூசை செய்து பாலைப் பூசித்துக் காச்சி சிவனுக்கு நிவேதனம் செய்தல் வேண்டும். பால்ப் பூசையினால் வெற்றியும், சிறந்த புண்ணியப்பேறும் கிடைக்கும்.

சூரியன் இம் மாதத்திலே செல்கின்ற ஆவணி மாதத்து அவிட்ட நட்சத்திரத்திலே சர்க்கரையுடன் கூடிய பூசை செய்தல் உகந்ததாகும். சிவனை யாகசாலையிலே அக்கினி குண்டத்தில் மூங்கில் சமித்தினால் ஹோமம் செய்து எள்ளை நன்றாகக் கழுவி சர்க்கரையோடு கலந்து இறைவனுக்கு நிவேதித்தல் வேண்டும். இம்மாதப் பூசையின்ால் ஒருவர் தாம் விரும்பிய சித்திகளைப் பெறுவார்கள்.

சூரியன் கன்னி ராசியில் செல்கின்ற புரட்டாதி மாதம் உத்தரட்டாதியில் நல்ல வளத்திற்காகக் கன்னி மாதப் பூசை செய்தல் வேண்டும். இறைவனுக்குரிய நிவேதனமாக வடை, எள்ளுருண்டை, முறுக்கு ஆகியனவாகும். சிவனை அக்கினி குண்டத்திலே எழுந்தருளச் செய்து நாயுருவிச் சமித்தினால் ஹோமம் செய்தல் உத்தமமாகும். புரட்டாதி மாதத்தில் சிவனை ராச உபசாரங்கள் வழங்கி வழிபடுதல் முக்கியமாகும். இம் மாதத்திலே அம்பிகைக்கு நவராத்திரி பூசை செய்வதும் அவசியமாகும். நவராத்திரி பூசையினால் ஒருவனுக்கு முடிவில்லாத இன்பம் பேறாகக் கிட்டும்.

சூரியன் துலா ராசியில் செல்கின்ற ஐப்பசி மாதத்தில் செய்யப்படுகின்ற துலா மாதப் பூசை அனைத்து செல்வங்களுக்காகவும் நிகழ்வதாகும். குறிப்பாக இறைவனுக்கு அன்னாபிசேகம் செய்து அன்னம் உயிரை நிலைப்படுத்துகின்ற காரணத்தினால் அன்னாபிசேகம் சிவனுக்கு மிகவும் உகந்ததாகும். அன்ன ரூபமானது சிவரூபத்திற்கு ஒத்ததாகும். யாகசாலையில் சிவனை உரியவாறு பூசித்துப் பின்னர் அன்னத்தை உரியவாறு ஆலயத்தை வலமாகக் கொண்டுவந்து அபிசேகம் செய்வது உத்தமம் ஆகும். பின்னர் சுத்தான்னம், தேனன்னம், தயிரன்னம், பாயாசன்னம், எள்ளன்னம், சர்க்கரான்னம், புளியன்னம், போன்ற அன்ன வகைகளை நிவேதனம் செய்து பூசித்தல் உத்தமமாகும்.

சூரியன் விருச்சிக ராசியில் செல்கின்ற கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்திலே இறைவனுக்குத் தீப பூசை செய்தல் முக்கியம். கார்த்திகைப் பூரணையிலும் தீப பூசை செய்யலாம். யாகவேதியிலே அக்கினி குண்டத்திலே சிவனை அத்தி சமித்தினாலே ஹோமம் செய்து மூலமூர்த்திக்கு நெல்மலரினாலே பூசை செய்வது உகந்ததாகும். விருச்சிகமாதப் பூசையின்போது ஆலயத்திலே தீப அலங்காரம் செய்வது மற்றும் அக்கினி சுவாலையை லிங்கமாகப் பாவித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதம் கூறும் கதைகள்

# இறைவன் நாமம் சோறு போடுமா?

தொகுப்பு — இரா. இராஜேஸ்வரக் குருக்கள்

ஓர் ஊரில் அமைதியான இடத்தில் ஓர் ஆலயம் இருந்தது. அந்தக் கோவிலில் திருவிழா நடைபெற்றது. பக்தர்கள் பலர் கூடி பகவானது நாமத்தை ஜபம் செய்து கொண்டு இருந்தார்கள். அப்போது ஓர் இளையன் அந்த வழியே சென்றான். அவனுக்கு இவற்றில் நம்பிக்கை கிடையாது. எனவே அவன் 'ஏன்' இப்படி கூச்சல் போடுகிறார்கள்? இதனால் என்ன கிடைத்துவிடும்? என்று பரிகசித்தான்.

இதைக் கேட்ட முதியவர் 'தம்பி' பகவானது திவ்விய நாமத்தைப் பழிக்காதே பகவானை விட அவரது திருநாமம் உயர்ந்தது, அதனால் ஆகாதது ஒன்றும் கிடையாது என்றார். இளைஞன் முதியவரிடம் பகவானது நாமத்தினால் ஆகாதது ஒன்றும் இல்லை என்கிறீர்களே, அவன் நாமம் சோறு போடுமா? என்று கேலியாகக் கேட்டான்.

முதியவர் உறுதியான குரலில் நீ பகவானது நாமத்தை நம்பிக்கையோடு உச்சரித்தால் பகவானே உனக்கு சோறு ஊட்டியும் விடுவார்' என்றார். இளைஞன் இதனைச் சோதனை செய்ய விரும்பினான் அதற்காக அவன் அருகில் உள்ள காட்டிற்குச் சென்றான். ஏனென்றால் காட்டில் அதிக ஜன நடமாட்டம் இருக்காது அல்லவா அது மட்டுமல்லாமல் ஓர் மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான். கீழே தரையில் அமர்ந்திருந்தால் போவோர் வருவோர் இரக்கம் கொண்டு ஒரு வேளை உணவுக்கு வழி செய்துவிடுவார்கள் அல்லவா? இவ்வாறு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் அவன் உட்கார்ந்துகொண்டான். இனி இறைவன் எப்படி உணவு தருகிறான் பார்க்கலாம் என எண்ணினான். ஆயினும் முதியவர் கூறியபடி பகவானது நாமத்தை முழுமனதுடன் கூறினான்.

இரண்டு நாட்கள் சென்றன. ஒன்றும் நடக்கவில்லை. இளைஞன் நம்பிக்கையுடன் இறைவன் நாமத்தைக் கூறிக்கொண்டே இருந்தான். அன்று மதியம் அந்த வழியே ஒரு வழிப்போக்கன் வந்தான். அவன் காட்டு வழியே செல்வதனால் இரண்டு நாளைக்கு உரிய உணவைக் கட்டுச் சாதகமாகக் கொண்டுவந்தான். இளைஞன் இருந்த மரநிழலில் அமர்ந்து அவன் மதிய உணவை உண்டான். பின்பு சாத மூட்டையைத் தலைக்கு வைத்து உறங்கினான். மாலையில் எழுந்து கட்டுச்சாத மூட்டையை மறந்து நடந்தான். இளைஞன் இவற்றையெல்லாம் கவனிக்காமல் இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தான்.

அந்தக் காட்டில் பல நாட்களாக ஒரு கள்வர் கூட்டம் இருந்தது. பக்கத்து ஊர்காரர்கள் பல முயற்சிகள் செய்தும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. வழிப்போக்கன் சாதமூட்டையை வைத்துவிட்டு சென்ற அன்றைக்கு கள்வர்கள் தாங்கள் கொள்ளையடித்த பொருட்களுடன் அதே மரத்தடிக்கு வந்தார்கள். அவர்கள் அந்தச் சாமான்களைப் பங்கிட ஆரம்பித்தார்கள். அப்போது அவர்களில் ஒருவன் சாத மூட்டையைக் கண்டான். அனைவருக்கும் பசியாக இருந்ததனால் முதலில் அதை சாப்பிட எண்ணினார்கள். ஆனால் அவர்களின் தலைவன் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது நம்மைக் கொல்ல ஊரார் வைத்த 'விஷ உணவாக இருக்கலாம்' என்றான்.

சுற்றும் முற்றும் தேடிய கள்வர்கள் மரத்தின் மேல் இருந்த இளைஞனைக் கண்டனர். அவனே உணவை வைத்தவன் என்று எண்ணி அவனை மிரட்டினார்கள். அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான். கள்வர் தலைவன் எனக்கு சந்தேகமாக உள்ளது. முதலில் இவனையே சாப்பிடச் சொல்லுங்கள் என்றான். இளைஞனோ சாப்பிட மறுத்தான் இது அவர்களது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது கள்வர் தலைவன் நம்மைக் கொல்லவே இந்த உணவை இவன் வைத்திருக்க வேண்டும்

---

வணங்குதல் குறிப்பிடத்தக்கதாகும். தீப உற்சவத்தைச் செய்தவர்கள் தாம் விரும்பிய நற்பலனை பயனாகப் பெறுவர். கார்த்திகை விளக்கீடு பற்றித் திருப்பதிகங்களிலும், காஞ்சி புராணத்திலும் பல விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு பன்னிரண்டு ராசிகளுக்குரிய பன்னிரு மாதங்களுக்கும் அந்தந்த மாதங்களுக்குரிய விசேட நட்சத்திரத்தின் போது நிகழ்த்தப்படுகின்ற பிசை சிவாலய வழிபாட்டிலே முக்கியத்துவம்பெற்று விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச்சரம்

அல்லை இடது கரை 03 (எல். வி. 03) மூன்றில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டாம் கட்ட உதவியாக தற்காலிக மனைகளுக்கு 75,000/- வும் கத்தி, மண்வெட்டி, அரிக்கன்லாம்பு முதலியவைற்றுக்கு 1,87,200/-வும் விவசாயச்செய்கைக்கு மொத்தமாக 3,00000/-வும் வழங்கப்பட்டன. நிதி உதவி 3,75,000/-டச்சு உட்கோயில் நிறுவனம் நெதர்லாந்து. 1,87,200/- (றோயல் நெதலார்ந்து தூதுவராலயம்)

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நினைவுப் பேருரை நூற்றாண்டுவிழா மூதூர் நவரெட்ணம் மண்டபத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. கொழும்பு இராமகிருஸ்ண சங்க உபதலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள். மேலும் இந்நிகழ்வுக்கு அருள்மிகு பூபாலவிநாயகர் ஆலய அறங்காவலர் சிவநெறிச் செம்மல் திரு. செந்தில்வேள் அவர்களும் உலகச் சைவப் பேரவைச் செயலாளருமான சிரோன்மணி திரு. துரைசர்மி அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

எமது பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான 5 நாள் வதிவிடப் பயிற்சி மூதூரில் நடத்தப்பட்டது. எல்லாமாக 33 ஆசிரியைகள் பங்குபற்றிப் பயனைப் பெற்றுள்ளனர். மொத்தச் செலவு 20000 நிதிஉதவி லண்டன் கிறிஸ்தவ நிதிஉதவி நிறுவனம்.

பேரவையின் கல்வித்திட்ட நடவடிக்கையால் எல்லாமாக 160 மாணவர்கள் பயனடைந்து வருகின்றார்கள், இவர்களில் 100 மாணவர்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் மூலம் மாதாந்தம் தலா 550/-வும் மொத்தமாக 1,65000/-வும் அவுஸ்திரேலிய இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம் மூலம் 60 மாணவர்களுக்கு 50,000/-வும் வழங்கப்பட்டன.

1990ம் ஆண்டு வன்செயலில் பாதிக்கப்பட்ட கிண்ணியா அருள்மிகு ஊற்றடிப் பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்பட்டுப் பிராயச்சித்த அபிஷேகத்துடன் பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது.

மொத்தச் செலவு ;- 15,000/-

நிதி உதவி பேரவையின் இந்து கலாசார நிதியம்.

தம்பலகமம் கிராமத்தில் பேரவையினால் வழங்கப்பட்ட விவசாயக்கடனை மீளச்செலுத்திய 200 விவசாயிகளுக்கு தலா 4300/-ப்படி மொத்தம் 868000/- விவசாயச் செய்கைக்கான கடன் உதவிவழங்கப்பட்டது

நிதி உதவி - ஒக்ஸ்பாம் நிதி நிறுவனம் லண்டன்

இவனைப் பிடித்து உணவை வாயில் ஊட்டுங்கள், என்றான். கோபத்தோடு கள்வரும் அவ்வாறே செய்தனர்.

இதனைக் கண்ட இளைஞன் முதியவர் கூறிய படியே அனைத்தும் நடப்பதைக் கண்டு, பகவானது திருவருளை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான் அந்தக் கனமே அவனுக்கும் பகவானது எல்லையில்லாத மகிமைகள் தெரியலாயின.

''நன்றி''

ஆதாரம்,
ஸ்ரீமத்பாகவதம்

---

தம்பலகமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18ம் கொலனிப் பகுதியில் 1990ம் ஆண்டு வன்செயலின் போது இடம் பெயர்ந்து தம்பலகமம் அகதி முகாமில் இருந்த மக்கள் 56 குடும்பங்கள் அரசினரால் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளனர், இம்மக்களுக்குத் தேவையான தற்காலிக மனைகளும், மண்வெட்டி. கத்தி, குப்பைவாரி, அரிக்கன்லாம்பு போன்ற பொருட்களும் பேரவையால் வழங்கப்பட்டு இங்குள்ள அம்பாள் ஆலயமும் திருத்தஞ்செய்யப்பட்டு மக்கள் வழிபாட்டிற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

தற்காலிக மனைக்கு - 1,41,680/-

நிதி உதவி - டச்சு உட் கோயில் நிறுவனம் நெதர்லாந்து, பிரித்தானிய தூதுவராலயம்.

வழங்கப்பட்ட பொருட்கள் - 40,000/-

ஆலயப்புனரமைப்புக்கு- 6000/- (பேரவை இந்து கலாசார நிதியம்)

மூதூரில் பேரவையால் ஆரம்பிக்கப்பட்ட அன்னை சாரதா மகளிர் இல்லம் இலங்கை இராமகிருஸ்ண சங்க உபதலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ் அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த பிரபல கொடை வள்ளலும் கொழும்பு பேலியாகொட அருள்மிகு பூபாலவிநாயகர் ஆலய அறங்காவலருமான சிவநெறிச் திருமூர்த்தி. செந்தில்வேள் அவர்கள் இவ்இல்லத்திற்கு 10000/- நன்கொடையளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● அண்மையில் இந்து கலாசார இராஜாங்க அமைச்சினால் ''சிவஞானச்செல்வர்'' எனப் பட்டமளிக்கப்பட்டு பாராட்டப்பட்ட பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளரும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளருமான ''சிவஞானச் செல்வர்'' செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்களுக்கு பல பாராட்டு விழாக்களை திருக்கோணமலை ஆலங்கேணி, தம்பலகமம், மூதூர், பட்டித்திடல் அல்லை இடதுகரை 03 போன்ற இடங்களில் பேரவையின் நிருவாகிகளும், தொண்டர்களும் இந்து இளைஞர் மன்றங்களும் மக்களும் நடத்தி வருகின்றார்கள்.

● இந்து கலாசார இராஜாங்க அமைச்சினால் 1993ம் ஆண்டு மாவட்ட ரீதியில் அறநெறிப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட இந்து சமயப் போட்டிகளின் திருக்கோணமலை மாவட்டப் பரிசளிப்பு விழா அண்மையில் பேரவையின் மகேஸ்வரி மண்டபத்தில் நடத்தப்பட்டது. அமைச்சின் சார்பில் இந்து சமயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து பரிசில்களை வழங்கினார்கள்.

வாழ்க்கையில் நான் செய்ய வேண்டிய பணி என்ன என்பது எனக்குத் தெரியும்; ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் அதிகப்பற்றும் வேறு ஒரு பிரிவினரிடம் தீவிர வெறுப்பும் கொண்டிருப்பது என்பது என்னிடம் இல்லை; நான் இந்தியாவிற்கு எந்தளவிற்கு சொந்தமானவனோ அதே அளவுக்கு உலகம் முழுவதற்கும் சொந்தமானவன். படித்த இந்துக்களிடையே நீ காணும் அந்தச் சாதிவெறி பிடித்த, மூட நம்பிக்கை கொண்ட, இரக்கமற்ற போலித்தனமிக்க, நாத்திக மனம்கொண்ட கோழைகளில் ஒருவனாக வாழ்ந்து இறந்து போவதற்காகப் பிறந்தவன் என்றா என்னை நினைக்கிறாய்? கோழைத்தனத்தை நான் வெறுக்கிறேன். கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. கடவுளும், உண்மையும்தான் இந்த உலகின் ஒரே அரசியல்! மற்றவை எல்லாம் வெறும் குப்பைதான்.

— சுவாமி விவேகானந்தர்

# கண்ணீர் அஞ்சலி

திருக்கோணமலை மாவட்டத்தின் பிரபல சைவக் குருக்களும் கோணேஸ்வரா அச்சக உரிமையாளரும் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளர்களில் ஒருவருமான சிவாச்சாரியார் பெரியார் பிரம்ம ஸ்ரீ சு. சண்முகரெத்தினசர்மா அவர்கள் கடந்த 24-07-94ல் சிவபதமடைந்து விட்டார்கள். அன்னாரின் மறைவு இந்து சமுதாயத்துக்கு ஏற்பட்ட ஓர் பேரிழப்பாகும் அன்னார் பல அறப்பணிகளுக்கு ஆதரவு நல்கியவர், தன்னை நாடி வரும் மக்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் சமய விடயங்கள் சம்பந்தமான ஐயப்பாடுகளுக்கான விளக்கங்களையும் அவ்வப்போது விளக்கி வந்தவர். மேலும் குறிப்பாகத் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினதும் பேரவையின் சஞ்சிகையான சிவநெறியினதும் வளர்ச்சிக்கு என்றும் உதவியாக இருந்து வந்தவர். இத்தகைய அநுபவஸ்தரை நாம் இழந்து நிற்கின்றோம். அன்னாருக்கு இச்சிவநெறி சஞ்சிகை மூலம் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்- அன்னாரை இழந்துள்ள அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகின்றோம்

— சிவநெறிச் சஞ்சிகைக் குழுவினர்



அமரர்
பிரம்மஸ்ரீ சு. சண்முகரெத்தினசர்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1



2



3

1- 19.05.94 அன்று திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் பேரவையின் மூதூர் உப அலுவலகத்தில் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நினைவுப் பேருரை நூற்றாண்டுவிழா நடத்தப்பட்டபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கொழும்பு இராமகிருஷ்ண சங்க உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜி மகராஜ் அவர்களுடன் கொழும்பு பேலியாகொடை அருள்மிகு பூபால விநாயகர் ஆலய அறங்காவலர் சிவநெறிச் செம்மல் திரு.தி.செந்தில்வேள் அவர்களும் கொழும்பு இந்து இளைஞர் மன்ற உபதலைவர், மதிப்பார்ந்த செயலாளர், பொருளாளர், பண்டிதர் இ.வடிவேல் அவர்களும் பேரவையின் தொண்டர்கள், நிர்வாகிகள் ஏனைய பிரமுகர்களையும் காண்க.

2- அன்னை சாரதா மகளிர் இல்லத்தை திறந்து வைப்பதற்காக வருகை தந்த கொழும்பு இராமகிருஷ்ண சங்க உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ் அவர்களுடன் இல்லப் பிள்ளைகள், இல்ல மேற்பார்வையாளர், இல்லத்தின் நிர்வாகச் செயலாளர் ஆகியோர்.

3- 20.05.94 அன்று பேரவையால் மூதூரில் திறந்து வைக்கப்பட்ட அன்னை சாரதா மகளிர் இல்லத்தின் திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியாக மூதூர் அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தில்இருந்து திருஉருவப்படங்கள் இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட காட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1



2




3

1. சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நினைவுப் பேருரை நூற்றாண்டுவிழாவில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள்

2. அன்னை சாரதா மகளிர் இல்ல திறப்பு விழா வைபவத்தில் கலந்து சிறப்பித்த கொழும்பு பேலியாகொடை அருள்மிகு பூபால விநாயகர் ஆலய அறங்காவலர் சிவநெறிச் செம்மல் திரு.தி.செந்தில்வேள் அவர்கள் இல்லத்தில் வைத்து அன்பளிப்புப் பணம் 10,000/- ரூபாவை பேரவையின் கணக்காளரிடம் வழங்குகின்றார்.

3. தி.மா.இ.இ.பேரவையினால் பேரவையின் மூதூர் உப அலுவலகத்தில் 21.05.94 தொடக்கம் 25.05.94 வரை நடாத்தப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஐந்து நாள் வதிவிடக் கருத்தரங்கின் ஆரம்ப நாளன்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மூதூர் பிரதேச செயலாளர்திரு.ஏ.தங்க்ராஜா அவர்கள் உரையாற்றுவதையும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் படத்திற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட ஆசிரியைகளில் ஒரு பகுதியினர்



4.6.94 அன்று தம்பலகமம் கோவிலடி அகதி முகாமில் இருந்த 98ம் கொலனி மக்கள் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் உதவியுடன் மீளக்குடியமர்த்தப்பட்டனர். இவ் வைபவத்தின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திருக்கோணமலை அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. கொடவெல அவர்கள் அரிக்கன் விளக்கு ஒன்றை பேரவையின் சார்பில் வழங்குவதையும், தம்பலகமம் பிரதேச செயலாளருடன் பேரவையின் தொண்டர்கள், நிர்வாகிகள் நிற்பதையும் படத்தில் காண்க.



வன்செயலில் பாதிக்கப்பட்ட அருள்மிகு திண்ணியா ஊற்றடிப்பிள்ளையார் ஆலயம் தி.மா.இ.இ.பேரவையினால் அண்மையில் புனரமைக்கப்பட்டு பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்ட போது பிரதான கும்பம் வலம் வரும் காட்சியையும் பிரதம குருக்கள் பிரதம ஸ்ரீ கணேஷஷண்முகதாசன் குருக்களையும் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கயிலாயங்கள்

ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் தங்களில் வலிமை மிகுந்தவர் யார் என்ற வாதம் நிகழ்ந்தது. கயிலை மலையை ஆதிசேடன் வளைத்துக் கட்டிப் பிடித்துக் கொள்ள வேண்டும் எனவும், அதை வாயு அசைத்துக் காட்ட வேண்டும் எனவும் அவர்கள் ஒரு போட்டியைத் தங்களுக்குள் வைத்துக் கொண்டார்கள். வாயு, தன் வலிமை எல்லாம் சேர்த்துக் காற்றை எழுப்பி, கயிலை மலையை அசைத்தான். மலையின் மூன்று குன்றுகள் வாயுவினால் பறித்து எறியப்பட அவை தெற்கே வந்து தனித்தனி மூன்று இடங்களில் விழுந்தன. அம் மூன்று குன்றுகளில் ஒன்றுதான் ஆந்திர மாநிலத்திலுள்ள திருக்காளத்தி மலை. மற்றொன்று தமிழகத்திலுள்ள திரிசிராமலை. ஈழத்திலுள்ள மற்றொன்று திருகோணமலை. இம்மூன்று மலைகளும் தென் கயிலாயங்கள் என அழைக்கப்படுகின்றன.




தி.மா.இ.இ. பேரவையால் ஒக்ஸ்பாம் (OXFAM) நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப்பட்டு வரும் மாணவர் உதவித்திட்டம் 07.05.94 அன்று புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயத்தில் வைபவரீதியாக நடைபெற்றபோது தி/மாவட்டதிற்கான தற்போதைய ஒக்ஸ்பாம் பிரதிநிதி செல்வி.டினேக்கா உரையாற்றுவதையும் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் மொழிபெயாப்பு செய்வதையும் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரதம் உணர்த்தும் தத்துவம்

டாக்டர் சுப. திண்ணப்பன்
(சிங்கப்பூர் பல்கலைக் கழகம்)

திருக்கோயில்களில் பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் மிகச் சிறப்பாகப் பூசைகள் நடத்தி அங்குள்ள இறைத் திருவுருவங்களைப் பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து கோயில் பிரகாரங்களிலும் வீதிகளிலும் நடத்தும் விழாவுக்குத் திருவிழா என்று பெயர். சமஸ்கிருதத்தில் இதனை உத்சவம் என்று கூறுவர். உயிர்களாகிய நமக்காக இறைவன் படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந் தொழில்களைச் செய்கிறான். இவற்றை விளக்குவது தான் திருவிழாவாகும். திருவிழாக்களில் கோயிலில் உள்ளிருக்கும் இறைவன் கோயிலுக்கு வெளியே வந்து கோயிலுக்கு வரவியலாதவர்களுக்கும் காட்சி அளித்து அருள் கொடுக்கும் பெருங்கருணைத் திறத்தையும் நாம் உணர்ந்துகொள்கிறோம் இத்தகைய திருவிழாக்களில் ஒன்று இரதத்தில இறைத் திருவுருவம் எழுந்தருளி வருதலாகும்.

முன்பு ஒரு காலத்தில் தாரகாட்சன்: வித்யுந்மாலி கமலாட்சன் என்னும் அசுரர்கள் சிவபூசை செய்து பொன். வெள்ளி, இரும்புக் கோட்டைகளைப் பெற்றனர். பின்பு செருக்கடைந்து அக்கோட்டை களுடன் பறந்து சென்று. தேவர்களுக்கும் மக்களுக்கும் தொல்லையும் துன்பங்களும் விளைவித்தனர். தேவர் கள் தொல்லை தாங்க முடியாது இறைவன் - சிவ பெருமானிடம் - சென்று முறையிட்டனர், அந்த அசுரர்களின் இறுமாப்பை அடக்குவதற்காகச் சிவ பெருமான் இரதம் ஏறினான். அதாவது பூமியையே நிலத்தையே ஆண்டவன் இரதமாகக் கொண்டான், இந்தப் பூமியாகிய தேரில் நான்கு வேதங்களும் நான்கு வெள்ளைக் குதிரைகளாகப் பூட்டப்பட்டன. இங்கு வேதம் என்பது அறிவைக் குறிக்கும். இந்த இரதத் தைச் செலுத்துகின்ற சாரதி பிரமா எனப்படும் நான் முகன். இவனின் ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு திசை யைக் குறிக்கும். இவன் வாயிலாக நில உலகங்கெங் கும் அறிவு பரவுதல வேண்டும். பூமியாகிய இர தத்தை வேதமாகிய குதிரைகளைப் பூட்டி ஒழுங்காக நடத்துபவன் பிரமா. இந்த இரதத்திற்குச் சக்கரங் களாக இருப்பவர் சூரியனும் சந்திரனும் ஆவன் நிலவுலகத்திற்கு ஒளியூட்டி இயக்குபவர்கள் இவர்கள் இருவர்தாமே, உயிர்களுக்கு வெம்மை தருபவர்? சூரியன், தண்மை தருபவன் சந்திரன், வெம்மையும் தண்மையும் உயிரினை இயக்கும் இயல்பின அல்லவா?

இரதத்தில் எழுந்தருளிவரும் இறைவன்கையில்ஒரு வில் உண்டு. மேருமலையே இந்த வில்லாகும் இந்த வில்லுக்கு அம்பாக உள்ளவர் விஷ்ணு. அதன் நுனி அக்கினிதேவன் எதிரிகளை அக்கினி எரிக்கும் அல்லவா. வில்லுக்கு நாணாக விளங்கியது வாசுகி என்னும் பாம்பு. இந்த இரதத்தின் இறகுகளாக உள்ளவன் வாயு (காற்று) இறைவன் இத்தகைய போர்க்கோலத் துடன் திரிபுரங்களாகிய மூன்று அசுரர் கோட்டைகளை யும் அம்பு எய்தித் தாக்கத் தொடங்கும்போது இரதத்தின் உறுப்புகளாக வந்தவர்கள் எல்லாரும் தம்மால்தான் இறைவன் திரிபுரம் அழிக்கப்போகிறான் என எண்ணத் தலைப்பட்டனர் இந்த நிலையினை உணர்ந்த இறைவன் இவர்களை எண்ணிச் சிரித்தான்

இச்சிரிப்பின் ஆற்றலால் திரிபுரம் தீப்பட்டது மேற்கூறிய மூன்று அசுரர்களும் அழிந்தனர் தேவர்கள் துன்பம் நீங்கி இன்பம் பெற்றனர் இங்குக் கூறப்பட்ட மூன்று அசுரர்கள் என்பவர்கள்(கோட்டைகள் என்பன) உயிர்களாகிய நமக்கிருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பர். இம்மலங்களை இறைவனின் திருவருட்சக்தி நிலவுலகமாகிய தேரில் எழுந்து வந்து எரித்தொழித்துப் பேரின்பத்தைத் தருவதையே இரதத்தில் இறை எழுந்தருளும் காட்சி நமக்கு உணர்த்துகிறது 'முப்புரமாவது மும்மல காரியம்'' என்பது திருமந்திரம் இரதத் திருவிழா தொடர்பாக இன்னொரு கதையும் உண்டு.

பகாக்ஷன் பொருட்டுச் சிவபெருமான் வேதங்கள் நான்கும் தேராகவும் உபநிடதங்கள் குதிரைகளாகவும் உமையவள் சாரதியாகவும் ஓம் என்னும் பிரணவம் சவுக்காகவும், காலச் சக்கரம வில்லாகவும், மகாமாயை நாணாகவும் அமையப் பாசுபதாஸ்திரம் கொண்டு அந்த அசுரனது வலிமையை அடிக்கியதாகவும் அந்த கதை கூறும்.

இரதத் திருவிழா யோகத்துடன் தொடர்புடைய ஒன்றாகவும் கருதப்படும். இரதத்தின் அமைப்பு அண்டத்தையும் பிண்டத்தையும் குறிக்கும். நம் உடலே இரதம், இந்த இரதத்தினை உள்ளிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குபவன் இறைவன். தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி அசைவற்ற மனத்தை உந்தி. குண்டலியிலிருந்து நாபிக்கும் அதிலிருந்து கழுத்திற்கும், பின் வாய்க்கும் ஏற்ற லயப்படுத்தி முறையே இரதக் குதிரையாம் மூக்கிற்கும்பின் புருவமத்திக்கும் ஏற்றி லயப்பட்டுச் சும்மா இருந்தபடியே இருக்கும் பேரின் நிலையையே யோக நிலையில் இரதத்திருவிழா குறிப்பதாகக் கொள்வர்.

ஐந்தொழில் நிலையில் இறைவனின் அழித்தல் தொழிலைக் குறிப்பதுதான் இரதத்திருவிழா. அழித்தல் என்பது ஆண்டவன் இவ்வுலகில் பிறந்து துன்பப் படும் உயிர்களைச் சற்று இளைப்பாற்றும் பொருட்டுத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கி வைத்துக் கொள்ளும் அருள்நிலையைக் குறிப்பதாகும். மேலும் யான் எனது என்னும் செருக்கினையும் இருவினைகளையும், உலகப் பற்றினையும் அழித்து நமக்குப் பேரின்பத்தையும் ஞானத்தையும் வீடுபேற்றையும் அளித்தலையே இரதத்தில் இறைவன் எழுந்தருளும் நிகழ்ச்சி நமக்கு உணர்த்துகிறது

# கடவுளை காண்பது எப்படி?

மனம் முரட்டுத்தனமானது, கட்டுக்கடங்காதது அதை அடக்க முயல வேண்டும். ஒரு ஈயானது எப்படி எல்லாப் பொருட்கள் மீதும் உட்கார்ந்து விட்டு தீயை அணுகும் போது பறந்து விடுகிறதோ அதைப் போன்று மனமானது இஸ்திரிய சுகங்களை நாடி அவற்றை அனுபவித்து அவற்றில் மூழ்கி தெய்வீகத்தைக் காணும் போது வேறு பக்கம் திரும்பி விடுகிறது. கட்டுங்கடங்காத இந்த மனம் கடவுளிடம் ஒன்று படாத வகையில் சம்சாரம் பிறவிப் பெருங்கடல் தவிர்க்க முடியாததே. மனதை ஜெயிக்காத வரையில் மீண்டும் பிறந்தேயாக வேண்டும் ஆனால் பிறவிகளிலே மானிடப் பிறவியே மிகச் சிறந்தது.

ஆகவே, மூர்த்தி பூஜை செய். அதாவது கடவுளை உருவங்களில் வழிபட்டு மனதை ஒரு நிலைப்படுத்து, சிலையும் கடவுளே உருவ வழிபாட்டைப் புறக்கணிக்காதே ஒரு உருவச்சிலை ஆழ்ந்த பக்தியுடன் பூஜிக்கப்படும் பொழுது, மனது லயத்தைப் பெறுகிறது.

பின்னர் மனம் (அதாவது) கடவுளின் லீலைகளை எண்ணுவது, தியானம் இவற்றைக் கடைப்பிடி. புராணங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றைப் பாராயணம் செய். அவற்றுள் கூறியிருப்பதைக்கடைப்பிடி, ஆத்மலிகத்தையே எல்லா ஞானத்திலும் சாலச்சிறந்தது. அதில் தேர்ந்து விட்டால் முக்தி கிடைத்து விடுகிறது. வரநி (கடவுளே நம் வசப்பட்டு விடுகிறார். இந்த ஞானத்தையும் மோகத்தையும் பெறுவதற்கான வழிகளை கூறுகிறேன்.

சாதன சதுஷ்ட்யத்தை, அதாவது நான்கு வித சாதனங்களை 1 ( நித்யானித்யவிவேகம் ஒ எது அழியக் கூடியது எது சாச்வதமானது என்றறிதல், 2 வைராக்கியம் 3 சமா-மனதை அமைதிப் படுத்துவது 4 முமுக்ஷத்வதும் முக்தியடைய ஆசை இவற்றைக் கடைப்பிடி நவவித பக்திகளைக் கடைப்பிடி உன்னைக் கடவுளுக்கே அர்ப்பணம் செய் அதுதான் ஆத்ம நிவேதனம்.

தினமும் சித்தர்கள், சாதுக்கள் ஆகியோரை தரிசனம் செய் தூய வாழ்க்கை நடத்து இறக்கும் தருணத்தில் எந்த ஆசையும் இருக்க கூடாது. உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் மீது மனத்தைச் செலுத்து மனதை ஈசனிடம் ஒருமைப்படுத்தியிருக்கும் போது, சாவு வருமானால் முக்தி நிச்சயம்.

அருளியவர்.
சாயிபாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

★ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ★

உலகத்தில் நாம் காண்கிற அன்பை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மகான்கள் யோக்கியர்கள் சத்தியசந்தர்கள், பரோபகாரிகள், ஞானிகள், அநுக்கிரக சக்திவாய்ந்த உத்தமர்கள் ஆகியோரிடம் அவர்களது குணத்துக்காக அன்பு ஏற்படுகிறது. பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும் சேர்ந்து பழகுவதால் அவர்களிடம் ஒருவித அன்பு உண்டாகிறது மூன்றாவது, ஒரு காரியத்துக்காக, லாபத்துக்காகச் சிலரிடம் அன்பு வைக்கிறோம், உதாரணமாக வியாபாரத்தில் சகாயம் செய்வார் என்பதற்காக ஒரு தனிகரிடம் அன்பு பாராட்டுகிறோம் சம்பளம் கொடுக்கிறார் என்பதால் யஜமானரிடம் அன்பாக இருக்கிறோம்

இந்த மூவகை அன்பும் உண்மையானதல்ல; சாசுவதமானதல்ல. யஜமானர், ''நீ போய்விடு'' என்றால் உடனேயே நம் அன்பும் போய்விடும். பழகினவர்கள் தூரதேசம் போனாலே, கால்கதி அடைந்தாலோ, வேறு விதத்தில் அவர்களுடன் பழக்கம் போய்விட்டாலோ நாளடைவில் அன்பும் போய் விடுகிறது, முதலில் பிரிவின்போது அழுத அழுகை அப்புறம் எப்படியோ மறைந்து விடுகிறது. உண்மையான அன்பானால் அந்த அழுகை என்றைக்கும் அப்படியேதானே இருக்க வேண்டும்? உத்தம புருஷர்களான மகான்களிடம் வைக்கும் அன்புகூட நிரந்தரமில்லை தான். மகானிடம் உத்தமகுணம் குறைந்தால்-அல்லது குறைந்ததாக நமக்குத் தோன்றினாலே போதும் -அவரிடம் வைத்த அன்பும் குறைந்து விடுகிறது-

மூவகை அன்பும் கரணத்தால் ஏற்பட்டது. என வேதான் அவை நிரந்தரமாக இருக்கவில்லை உத்தம புருஷர்களிடமும் இன்ன குணம் இருக்கிறது என்பதால், அந்தக் குணத்தைக் காரணமாகக் கொண்டே அன்பு வைக்கிறோம். அதோடு அவர்கள் நம்மை உத்தாரணம் செய்வார்கள் (உய்விப்பார்கள்) என்ற சுயகாரியமும் உள்ளூர இருக்கவே செய்யும்.

இப்படியெல்லாம் எக்காரணமும் வியாஜமும் இன்றி பிரியமாக இருப்பது தான் உண்மை அன்பு. ஒருவர் நம்மிடம் நெருங்கிப் பழகாவிட்டாலும் சரி, அவருக்கு ஆத்ம குணங்களும் அநுக்கிரக சக்தியும் இல்லாவிட்டாலும் சரி, அவரால் நமக்கு எந்தக் காரியமும் ஆகாவிட்டாலும் சரி—அப்போதும் நாம் அவரிடம் மாறாத அன்பு வைத்தல் அதுவே உண்மையான அன்பு.

அப்படிப்பட்ட அன்பு யாருக்காவது இருக்கிறதா? ஒரே ஒருவருக்கு இருக்கிறது. ஸ்வாமிதான் அந்த ஒரே ஒருவர்.

ஸ்வாமிக்கு நம்மிடம் இருக்கும் அன்புக்கு ஒரு காரணமும் இல்லை. காரணத்தை அவர் பாராட்டுவதாக இருந்தால் நமக்கு ஒருவேளை சோறுகூடப் போடமாட்டார்! நம் பிழைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு. நம்மை இந்த மட்டும் காப்பாற்றுபவர் அன்பு மயமான பரமேசுவரனே. இந்தப் பரமசிவ அன்பின் திரிபே உலகில் காணும் மூன்றுவகை அன்புகளும்.

அந்தக் காரணமற்ற பரமசிவ அன்பை நாமும் அப்பியாசிக்க வேண்டும். தப்புச் செய்பவன் என்று காரணம் பார்த்து நாம் ஏன் ஒருவனை வெறுக்க வேண்டும்? நாமே தப்புச்செய்கிறோமே, அப்போது நம்மை நாமே உதறித் தள்ளுகிறோமா? அப்படியே மற்றவர்களிடத்திலும் இருக்க வேண்டும். மகா பெரியவர்களிடத்தில் அன்பு இருப்பது விசேஷம் இல்லை மகாபாவியிடமும் அதே அன்பு இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அவனிடமே அதிக அன்பு வைக்கவேண்டும். ''நாம் தப்புச் செய்வது போலவே இவனும் செய்கிறான். இவன் மனம் இவனை இப்படித் தூண்டுகிறது. அந்த மனத்தை நல்லதாக்க முயற்சிபண்ணுவோம்'' என்று நினைக்க வேண்டும். ஈசுவர கிருபையால் அநுக்கிரக சக்தி பெற்றிருப்பவர்கள், அதைக் கொண்டு பாவியிடம் உள்ள பாபங்களை நிவிருத்தி பண்ணுவதையே முக்கியமாகக் கொள்ளவேண்டும்.

ஆரம்பத்தில் ஒரே ஒரு மனிதரிடம் காரணமில்லாத தூய அன்பை வைக்கப் பழகிவிட்டால் பின்னால் அதுவே நம்மை அன்புமயமாக்கி, அந்த அன்பை எல்லோரிடமும் பரப்ப உதவி புரியும். குருவிடம் இவ்விதம் பயன் எதிர்பாராமல் பூரண அன்பு வைக்கப் பழகவேண்டும் என்பது பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ள விதி, குருவிடம் காரணம் பார்க்காமல் வியாஜம் இல்லாமல் அன்பு செலுத்த ஆரம்பிக்க வேண்டும். பின்பு அந்த அன்புதருகிற ஆனந்தத்தில் பழகிப்பழகி உலகம் முழுவதும் குருவாக நினைத்து, சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லாத சமமான அன்பு செலுத்த வேண்டும். உலகம் முழுவதும் அன்பை நிரப்பினால் அதுவே ஆனந்த நிலை, அதுவே பரிபூர்ணநிலை; அதுவே பரம சாந்தி.

நன்றி—தெய்வத்தின் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமல் செய்யும் தவறுகள் பாவங்கள் அல்ல?

— கவிஞர் கண்ணதாசன் —

நதியின் ஓட்டம் பள்ளத்தை நோக்கியே! அந்த நாயகனின் ஓட்டம் எளிமையான நேர்மையை நோக்கியே. ஒன்றும் அறியாமல் செய்யும் தவறுகள், பாவங்கள் அல்ல, அவை வெறும் தவறுகளே. அவற்றுக்கு உடனே மன்னிப்பு உண்டு. அறிந்து செய்யும் தவறு, தவறல்ல; அது குற்றம். அதற்கு மன்னிப்புக் கிடையாது.

ஆண்டவனின் அவதாரங்கள் கூட, அறியாமல் தவறு செய்திருப்பதாக, வழக்குக் கதைகள் உள்ளன. இது சம்பந்தமாக ஸ்ரீ இராமகிருஷ்ணர் சொன்ன ஒரு கதை வருமாறு;

ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தி ஒரு முறை கங்கைக்குக் குளிக்கச் சென்றார். அவரது அம்பறாத் தூணியில் ஒரே ஒரு அம்பு மட்டுமே இருந்தது. அந்த அம்பைப் படுக்கை வசமாக வைக்கக் கூடாது என்ற மரபுப்படி, அதைப் பூமியிலே குத்தி வைத்தார் இராமர். ''ஒற்றை அம்பை ஊன்றி வை'' என்பது வழக்கு.

அம்பை ஊன்றிய இராம பிரான், கங்கையில் குளித்து விட்டுக் கரையேறினார், ஊன்றிய அம்பை எடுத்தார் அதில் ஒரு தேரைக் குஞ்சு குத்தப்பட்டிருந்தது. பூமிக்குள் இருந்த தேரைக்குஞ்சை அவர் அறியாமல் குத்தி விட்டார் தேரைக் குஞ்சு சாகும் தறுவாயில் இருந்தது.

இராமபிரானின் கண்கள் கலங்கிவிட்டன 'ஐயோ தேரையே?... நான் குத்தும் போது, நீ சத்தமிட்டிருந்தால், காப்பாற்றியிருப்பேனே; ஏன் சத்தமிடவில்லை'' என்று அவர் கேட்டார்.

அதற்கு தேரை சொன்னது; ''பெருமானே? யாராவது எனக்குத் துன்பம் செய்யும் போதெல்லாம், நான் 'இராமா, இராமா' என்று தான் சத்தமிடுவேன் அந்த இராமனே என்னைக் குத்துகிறார் என்னும் போது, யார் பெயரைச் சொல்லி நான் ஓலமிடுவேன்?''

இராமபிரான் கண்ணீர்ரோடு சொன்னார் ''தேரையே என்னை மன்னித்துவிடு. இது நான் அறி; யாமல் செய்த பிழை!''

தேரை சொன்னது; ''பெருமானே! 'அறியாமல் செய்கின்ற பிழைகள் அப்பொழுதே மன்னிக்கப் படுகின்றன என்று கூறியது உன் வாக்குத்தானே?'' தேரையின் ஆவி பிரிந்தது.




## சஞ்சிகைக் குழு

★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
★ திரு. க. சவுந்தரராசா துணைஆசிரியர்
★ திரு. வ. தங்கராசா
★ திரு. செ. சிவபாதசுந்தரம்
★ திரு. சு. கனகசபாபதி
★ திரு. நா. காளிராசா
★ திரு. கெ. தர்மகுலராசா
★ திரு. செ. ஜெயச்சந்திரன்
★ திரு. பூ. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு ஒரு நோக்கு

க. த. இராசரத்தினம் உப. அதிபர் கொ / இந்துக்கல்லூரி

''மதம் என்பது வெறும் சடங்குகள் அல்ல; வெறும் வரட்சியான வேதாந்தம் பேச்சுக்கள் அல்ல; வெறும் ஆசார அனுட்டானங்களும் அல்ல; வெறும் அபிடேகங்களும் பூசைகளும் அல்ல; வெறும் தொழுதல், விழுதல், எழுதல் போன்ற உடல் அசைவுகளும் அல்ல; மதம் என்பது பரம்பொருளைத் தெளிவாக உணர்வது உணர்ந்தபின் அப்பரம் பொருளைப் போல் இருப்பது, பின்னர் அந்தப் பரம் பொருளாகவே மாறுவது'' என சுவாமி விவேகானந்தரின் உபதேசங்களிலிருந்து அறிந்து கொள்ள முடியும். இந்தவகையில் சக்தியை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வழிபடும் மதம் சாக்தமாகும். எனவே இவ் ஆய்வில் வழிபாடு என்றால் என்ன? சக்தி வழிபாட்டின் வரலாற்று நோக்கு; சக்தியின் தோற்றம்; சக்தியின் மூர்த்தங்கள் அவற்றின் பெருமைகளும் சக்தி வழிபாட்டு முறைகள் சக்தி வழிபாட்டால் பயன் பெற்றோர் என்பவை ஆய்வு செய்யப்படுகின்றன.

'வழிபடு' என்ற அடிச்சொல்லிலிருந்தே 'வழிபாடு' என்ற சொல் பிறந்ததாகும். இச்சொல் 'வழியிற் சொல்லுதல்' பின்பற்றுதல்' வணக்கம்; 'பூசனை' என்ற பொருட்களைத் தருகின்றது. 'வழிபாடு' என்பது பூசனை எனப் பிங்கலநிகண்டும், வணக்கம் என செந்தமிழ் அகராதியும்; வணக்கம் கோட்பாடு என தற்கால தமிழ் அகராதியும் வணக்கம், வழியிற் செல்லுதல்; பின்பற்றுதல்; பூசனை வழக்கம் சமயக் கோட்பாடு என கழகத்தமிழ் அகராதியும் கூறுகின்றன.

வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்ச்சி, குற்ற உணர்வு என்பவற்றிலிருந்து தோன்றியது என பிரபல உளவியல் அறிஞர் சிக்மன்புறொயிட் குறிப்பிடுகின்றார். மனிதன் இவ் உலகில் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று நல்வாழ்வு வாழ விரும்புகின்றான். 'இறைவனே' பிறர் தரமுடியாத எல்லாவற்றையும் தனக்குத் தருவதாக மனிதன் நம்புகின்றான். இதனால் அவன் இறைவனை வணங்குகின்றான். புராண மக்கட் கூட்டத்தினர் கருவளத்தையும், பயிர்வளத்தையும் ஒருங்கே பெறுவதற்காகவே மந்திரங்களைக் கையாண்டனர். இதன் தருக்கரீதியான முடிவாக வழிபாடு தோன்றியிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது.

உலகின் ஆதிவாசிகள் இயற்கையை பல்வேறு வடிவங்களில் வணங்கினர். புதைபொருள் ஆய்வுகளின் படி சக்தி வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. புதை பொருள் ஆய்வாளரான பேராசிரியர் சர்மா கி.மு. 200 - 150 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்தே சக்தி வழிபாடு நிலவியது எனவும் உத்ரப் பிரதேசத்தில் உள்ள மிர்சாப்பூரில் கண்டெடுக்கப்பட்ட ஒரு அம்மன் திருவுருவத்திலிருந்து சக்தியின் தோற்றத்தையும் வழிபாட்டு அம்சங்களையும் கண்டறிய முடியும் எனக் கூறினார்.

மொகஞ்சதாரோ; கரப்பா போன்ற இடங்களில் செய்யப்பட்ட ஆய்வுகளின் படியும் சக்திவழிபாடு மிகவும் தொன்மையானது என உணரப்பட்டுள்ளது மெசப்பட்டோமியா; எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளிலும் இதே காலத்தில் தாய்த் தெய்வ வழிபாடு நிலவியதாக றோமிலாதப்பர் (ROMILA THAPER) தனது ஆய்வுகளில் குறிபபிட்டுள்ளார்.

ஆறுகளைப் பெண்களாகப் போற்றும் வழக்கமும் ஆரம்ப காலத்திலிருந்தே நில்வி வருகின்றது. (கங்கை, காவேரி......) தமிழ் இலக்கியங்களில் ''தொண்மூதாட்டி'' ''முந்தை மூதாட்டி''; ''முதுமூதாட்டி'' எனவரும் தொடர்கள் தாய்த் தெய்வத்தையே குறிக்கின்றன.

தமிழ் நாட்டில் சக்தியின் ஒரு வடிவமான கொற்றவையின் வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்ததாகும். 'மோடி' என்பவளே ஞாலம் ஏழையும் ஈன்ற நாயகி எனக் கருதப்படுகின்றாள் இவளையே பெரு மேட்டுக் காட்டுக்கிளாள்' என இலக்கியங்களும் 'பேகமார் மோடி' 'கடற் கோடியின் மோடி' எனத் திருமுறைகளும் கூறுகின்றன. 2700 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதி நல்லூர் புதை பொருள் ஆய்வில் பெரிய வயிறும் முலைகளும் உள்ள தாய்த் தெய்வத்தின் உருவம் கண்டு பிடிக்கப்பட்டது.

முற்காலத்தில் காடும் காடு சார்ந்த இடமும் தாய்த் தெய்வத்தின் உறைவிடமாகக் கருதப்பட்டது. இவ்வுண்மையை நாம் கலித்தொகையில் வரும் 'பெரும் காட்டுக்கொற்றி' மணிமேகலையில் வரும் 'காடமர்செல்வி' திருமுருகாற்றுப் படையில் வரும் 'வெற்றிவேல் போர் கொற்றவை' என்ற தொடர்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

காட்டுக் கிளாளுக்கு பிற்காலத்தில் கோயிலும் முற்றமும் அமைத்து வழிபடும் வழக்கம் உருவாகியது. இதனை 'திருச்சக்தி முற்றத்து சிவக்கொழுந்தை...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நாவுக்கரசரின் அடிகளிலிருந்து அறிந்து கொள்ள முடியும். மணிமேகலை காலத்தில் 'சக்கரவாளக் கோட்டம்' புகழ் பெற்ற காடமர் செல்வியின் கோயிலாக விளங்கியது.

சக்தியை வணங்க அமைக்கப்பட்ட கோயில்களில் காஞ்சிப்புரம் காமாட்சியம்மன் கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், மகாபலி புரம் திரௌபதி இரதம் ஆகியவை பழைமையானவை. முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் தான் 'திருக்காமக் கோட்டம்' என்ற சக்திக்கான திருமுன் அமைக்கப்பட்டது. எனினும் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து தான் சக்திக்கெனத் தனியான கோயில் கட்டிட அமைப்பில் இடம் பெற்றது எனலாம்.

காட்டுக் கிளாளை சிவன் உறவு கொண்ட செய்தி தேவாரங்களில் காணப்படுகின்றது. ''முது கோதையோடு ஆடிய நீள்மார்பன்......'' போகமார் மோடி கொங்கை புணர்தரும் புனிதாபோலும்.... என்ற அடிகள் இதற்குச் சான்றாகும்.

கொற்றவை பழந்தமிழரின் வெற்றித் தெய்வமாகும். இவளை மன்னர் போர்த் தெய்வமாகவும் வேடரும் எயினரும் வேட்டைத் தெய்வமாகவும் போற்றினர். கலிங்கத்துப்பரணியில் கொற்றவைக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இச் செய்தி சிலப்பதிகாரத்தில் நவகாண்டம் எனக் கூறப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரீகத்தில் பலி கொடுக்கும் வழக்கம் இருந்ததாக சேர் ஜோன் மாசல் கூறுகின்றார்.

கிரேக்கர் காலத்தில் பயன்பாட்டிலிருந்து ஸ்தார் ஆர்ட்டிமிஸ் அப்புரெணடற் போன்ற பெயர்கள் தாய்த்தெய்வ வழிபாடு அங்கு நிலவியது என்பதைக் காட்டுகின்றது. சுமேரிய நாகரீகத்திலும் ' உம்மா ' என்ற தாய்த்தெய்வத்தை வழிபட்டமைக்கு சான்றுகள் உண்டு.

உலக மக்களின் நன்மையின் பொருட்டு சக்தி இமவான் புத்திரி இமாவவதியாகவும் தஷ்சனின் புத்திரி சதியாகவும் பிறந்து சிவனை மணந்தாள் எனப் புராணங்கள் கூறுகின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் செய்யும் மூல சக்தி அன்னை ஆவாள். அன்னை சத்துவம் குணம், ராஸகுணம், தாமசகுணம் என்ற குணங்களைப் பெற்றுள்ளாள்.

## இலக்குமி

அன்னையின் குணங்களில் சத்துவம் முதன்மை பெற்றால் சகுணப்பிரம்மம் உலகைக் காக்கும் மகா விஷ்ணு ஆகின்றார். இவருடைய சக்தி வைஷ்ணவி நாராயணி, இலக்குமி என அழைக்கப்படுகின்றாள்.

இலக்குமி செல்வத்திற்கு அதிபதியாவாள். தனமும், தானியமும், கனகமும் இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய செல்வங்களையும் இவ்வன்னை அளிக்கின்றாள். எனவே இவள் இவ் உலக வாழ்க்கைக்கு முக்கியமான சக்தியின் வடிவமாகின்றாள்.

## சரஸ்வதி

அன்னையிடம் ராஸகுணம் முத்கியத்துவம் பெற்றால் சகுனப்பிரமம் படைக்கும் தொழில் புரியும் பிரம்மாவாகின்றாள். இவள் பிராமணி, சரஸ்வதி, ஞானசொரூபினி, வேதவித்தகி, நான்மறை நாயகி கலைமகள்... எனப் பெயர் பெறுகின்றாள்.

கல்விக் கடவுளாகிய கலைமகள் நான்முகன் நாவில் உறைவதாகக் கருதப்படுகிறது. ''அஞ்சத் துவச முயர்ந்தோன் செந்தா'' என்பது குமரருபரரின் திருவாக்காகும்.

கலைமகள் வணக்கம் எல்லோரினாலும் மேற்கொள்ளப் படுகின்றது. கலைமகளின் வடிவம் ஞான வடிவமானது. எனவே தான் அவளை வெண்மை நிறமாக போற்றுகின்றனர். அத்துடன் அவளுடைய ஆடையும், அவள் வீற்றிருக்கும் தாமரையும் வெண்மை நிறமே.

வாழ்க்கைக்குப் பயன்படும் அறுபத்து நான்கு கலைகளின் உறைவிடமாக கலைமகள் விளங்குகின்றாள். இவள் கவிஞர்களின் நாவிலும் அறிவாளிகளின் மனத்திலும் இவ் உலக மக்கள் நன்நெறி பெற வழிகாட்டும் வேத நூல்களிலும் கலைமகள் மகிழ்ந்து வாழ்கின்றாள். மேலும் குழந்தைகளின் மழலைமொழியிலும், காலையில் கூவும் குயிலின் குரலிலும், சிற்பங்களிலும், ஓவியங்களிலும் அன்னை உறைகின்றாள்.

## துர்க்கை

அன்னையிடம் தாமசகுணம் முக்கியத்துவம் பெற்றால் சகுணப்பிரம்மம் அதர்ம இருளை அழிக்கும் மகேஸ்வரர் ஆகின்றார் இவருடைய சக்தி காளி சாமுண்டி, ஜகத்தாத்திரி, சண்டிகை... என்ற பெயர்களைப் பெறுகின்றாள்.

சும்பன், நிசும்பன் என்ற அசுரர்கள் தேவர்களை தாக்கினர் தேவர்கள் பராசக்தியிடம் முறையிட்டனர். கோபங் கொண்ட பராசக்தியின் உடலிலிருந்து கோசிகை தோன்றினாள். இவள் தனது நெற்றியிலிருந்து காளி என்ற பயங்கரியைத் தோற்றுவித்தாள். இவள் பலகைகளிலும் பலவகை ஆயுதங்களுடனும் கழுத்தில் கபாலா மாலையும் உடலில் புலித்தோலையும், தொங்கும் நாக்கையும், நெருப்புக்கக்கும் விழிகளுடனும், வானைப் பிளக்கும் பேரொலியுடனும் தோன்றினாள் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு தோன்றிய காளி அசுரர்களின் தலைகளைக் கொய்து தேவர்களைக் காப்பாற்றினாள்.

துர்க்கை வீரத்தின் உறைவிடமாக விளங்குகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் உலகு

## திருமந்திரம்

ஆகமப் பொருளை தமிழிலே கூறும் முதல் நூல் திருமூலர் அருளிச் செய்த திருமந்திரமாகும் இது 10 ஆம் திருமுறையாக அமைந்துள்ளது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் மூவாயிரம் பாடல்களையும் கொண்டது.

| தந்திரம் | அவ் ஆகமத்தின் சாரம் | எதனைக் கூறுகிறது |
|---|---|---|
| முதலாம்தந்திரம் | காரணாகமம் | 1. சைவ மக்களின் ஒழுக்கம்<br>2. பிறர் மனை நயவாமை<br>3. புலால் மறுத்தல்<br>4. கொல்லாமை<br>5. கள்ளுண்ணாமை<br>6. கல்வி |
| இரண்டாம்தந்திரம் | காமிகாகமம் | 1. சிவபுராண வரலாறு<br>2. கரு உற்பத்தி<br>3. சிவன் இயற்றும் ஐந்தொழில் |
| மூன்றாம்தந்திரம் | வீராகமம் | 1. அட்டமா சித்தி<br>2. அட்டாங்க யோகம்<br>3. ஆயுட் பரீட்சை |
| நான்காம்தந்திரம் | சிந்தாகமம் | 1. பல சக்கர அமைப்பு<br>2. வயிரவி மந்திரம் போன்ற பல மந்திரம் கூறப்பட்டுள்ளது. |
| ஐந்தாம்தந்திரம் | வாதுளாகமம் | 1. சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்கசைவம், கடுஞ் சுத்தசைவம் என்னும் சைவத்தின் வகைகள்.<br>2. சரியை, கிரியை, யோகம் ஞானம்<br>3. தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்<br>4. இவற்றால் அடையும் முக்தி. |
| ஆறாம்தந்திரம் | வியாமளாகமம் | 1. சிவகுரு தரிசனம்<br>2. திருவடிப் பேறு<br>3. திருநீற்றின் மாண்பு<br>4. துறவு<br>5. தவம் |
| ஏழாம்தந்திரம் | காலோத்தராகமம் | 1. இலிங்க வகை<br>2. ஆறு ஆதாரம்<br>3. மகேசுர பூசை<br>4. சமாதி அமையும் முறை<br>5. குரு பூசை விதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| எட்டாம்தந்திரம் | சுப்பிரராகமம் | 1. பதி, பசு, பாசம் விளக்கம்<br>2. 'தத்துவமசி' என்ற மகா வாக்கிய ஆராய்ச்சி<br>3. மூக்குற்றம்<br>4. முப்பாழ் |
| ஒன்பதாம்தந்திரம் | மகுடாகமம் | 1. பஞ்சாக்கர விளக்கம்<br>2. திருக்கூத்து தரிசனம்<br>3. ஞானோதயம்<br>4. சிவசொரூப தரிசனம்<br>5. மோனசமாதி<br>6. அணைத்தோர் தன்மை<br>முதலானவை கூறப்படுகின்றது |

## பக்தியின் ஒன்பது வகைகள்

1. யாதனம் — கோயில்கள் எடுப்பித்தல், திருநந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகள் செய்தல்
2. சிரவணம் — இறைவனின் வரலாறும் பெருமையும் பற்றிக் கூறும் நூல்களைத் தக்கவர்கள் சொல்லக்கேட்டு மகிழ்தல்.
3. கீர்த்தனம் — இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல், இசையுடன் பாடல்களைப் பாடுதல்.
4. அர்ச்சனம் — நீராட்டிப் பூச்சூட்டி நிவேதனம் படைத்துப் பூசித்தல்,
5. ஸ்துதி — இறைவனைப் புகழ்ந்து தோத்திரப் பாடல்களை இயற்றுதல் அல்லது பாடுதல்.
6. வசனம் — இறைவனின் அருட்பெருமைகளை பலருக்கும் எடுத்துக் கூறி விளக்குதல்;
7. வந்தனம் — இறைவனை அஷ்டாங்கம், சாஷ்டாங்கம் முதலிய வகைகளிற் பணிந்து வணங்குதல்
8. ஸ்மரணம் — இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல்;
9. தியானம் — சுகாசனம் முதலிய நிலைகளில் அமர்ந்து மனத்தை ஒரு முகப் படுத்தி, அன்பு செலுத்தி இறைவனை வழிபடுதல்

கிணற்று ஜலத்துக்குள் நீர் நிரம்பிய குடத்தை இழுக்கும் போது கனம் தெரிவதில்லை. ஆனால் தண்ணீர் மட்டத்துக்கு மேலே குடம் வந்தவுடன் கனக்க ஆரம்பித்துவிடுகிறது. எளிதில் புரட்ட முடியாத பெரிய மரங்களை வெள்ளத்துக்கு அடியாகத்தான் புரட்டி இழுப்பது வழக்கம். அதே மாதிரி நம் துக்கங்களையெல்லாம் ஞானமாகிற தண்ணீரில் அமுக்கி விட வேண்டும். அப்போதும் துக்க வேரதுவான விஷயங்கள் இருக்கத்தான் செய்யும் ஆனால் ஜலத்துக்குள் இருக்கிற குடம் மாதிரி துக்கம் பரம இலேசாகிவிடும்.

அருளியவர்,
காஞ்சிப் பெரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீட்சை

## வினா - விடை

1. தீட்சை என்பதன் பொருள் என்ன?

ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்பது பொருளாகும்.

2. மந்திரம் என்பதன் கருத்து என்ன?

தெய்வத்தை அழைப்பது அல்லது நினைப்பவரைக் காப்பது.

3. எவற்றை மந்திரம் என அழைப்போம்?

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியையே மந்திரம் என அழைப்போம்.

4. மந்திரத்தை உச்சரிப்பதால் ஏற்படும் பயன் என்ன

நிறைமொழி மாந்தரால் கூறிய மந்திரங்களுக்கு அளப்பரிய சக்தி உண்டு அதனை நாம் வாய்க்குள் மீண்டும் உச்சரிக்க மனம் முதலில் அந்த ஓசையில் இலயிக்கும், பின்னர் அந்த ஓசை வடிவான இறைவனிடம் ஒருங்கி விடுகின்றது. இவ்வாறு மனம் ஒருங்கும் போது நாம் இறைவனைப் புறத்தே தேடி அலையாது எமது உள்ளத்திற்குள்ளேயே இறைவன் இருப்பதனை உணர்வோம் இதுவே மந்திரம் உச்சரிப்பதன் நோக்கமாகும்.

5. எமது உள்ளத்திற்குள்ளேயே இறைவன் இருப்பதனை உணர்வோமாயின் அதன் பயன் என்ன?

நாம் செயற்கரிய செயல்களை செய்ய வல்லவராவோம். இந்த வல்லமையை வெறும் சித்துக்களைச் செய்வதற்கு மாத்திரம் பயன்படுத்துவோர் உண்மையான இலக்கை இழந்து விடுவர். இறைவனோடு இரண்டறக் கலக்கும் முத்தியே உண்மையான இலக்காக இருப்பின் இறைவனுடன் இரண்டறக் கலந்து முத்தி பெறலாம்.

6. சிவபெருமானைத் தியானித்து விதிப்படி வழிபடுவதற்கு நமக்குத் தகுதியளிப்பது எது?

சிவதீட்சையாகும்.

7. எழுவகைத் தீட்சைகளும் எவை

1. நயன தீட்சை
2. பரிச தீட்சை
3. வாசக தீட்சை
4. மானச தீட்சை
5. சாத்திர தீட்சை
6. யோக தீட்சை
7. ஒளத்திரி தீட்சை

## இந்து சமய வினா விடைப் பதிர் - 11

### சரியான விடைகள்

1. தலைவன்
2. சுவாமி முத்தியானந்தர்
3. வல்லிபுர ஆழ்வார் ஆலய கருவரையில்
4. 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி
5. கந்த புராணத்தில் ஆறு கண்டம் உள்ளது அவையாவன.

   1. உற்பத்தி காண்டம்
   2. மகேந்திர காண்டம்
   3. அசுர காண்டம்
   3. யுத்த காண்டம்
   5. தேவ காண்டம்
   6 தசஷ காண்டம்

6. ஆணி மகம்
7. மயில்
8. சாமீப முத்தி
9. பவ வருஷம்
10. நரேந்திரன்

### பரிசு பெற்றோர் விபரம்

**முதலாம் பரிசு**

செல்வி. புஸ்பலதா பால்சாமி
தி/செல்வநாயகபுரம்
அரசினர் தமிழ் வித்தியாலயம்.

**இரண்டாம் பரிசு**

செல்வன். கா. வடிவேல்
மத்திய வீதி,
பட்டித்திடல்,
தோப்பூர்.

**மூன்றாம் பரிசு**

செல்வன் ச. ரமேஸ்
ஆண்டு 9 ஏ
தி/தம்பலகமம் ம, வி.

**ஆறுதல் பரிசு**

செல்வன் சு. குணநாயகம்
இ கி. மி. சிவானந்தா வித்தியாலயம்
கல்லடி உப்போடை, மட்டக்களப்பு,

செல்வி. செ. சந்திரகலா
ஆலய வீதி, மூதூர் 3.

செல்வி. நா. சுமதி
தி/தம்பலகம் ம. வி

சண்முகலிங்கம் பிரசாந்தனா
தி/தம்பலகமம் ம. வி

செல்வி. சொ. ஜீவேஸ்வரி
தி/சம்பூர் ம. வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினா விடைப் புதிர் - 12

இந்து சமய தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் அறியும் பொருட்டு இதன்கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்

1. சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த முதனூல்கள் எவை ?
2. திருநந்தி தேவருக்கு ஆசாரியர் யாவர் ?
3. வில்வம் எடுக்கலாகாத காலங்கள் எவை?
4. சித்திரைப் பரணி விரதம் யாரைக் குறித்து அநுட்டிக்கப்படுகிறது?
5. முன்னேஸ்வர ஆலய தீர்த்தத்தின் பெயர் என்ன ?
6. உத்தராயணம் என்றால் என்ன ?
7. கோயில்களில் எந்தத் திக்குகளில் கால்நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது ?
8. சிவாலயத்தில் எப்படிப் பிரதச்ஷணம் பண்ணல் வேண்டும் ?
9. சைவசமயக் குரவர்கள் யார் ?
10. கும்பாபிஷேகம் என்றால் என்ன ?

குறிப்பு:- இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதினால் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

பெயர் :

முகவரி :

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர்,
'' சிவநெறி''
தி. மா. இ. இ. பேரவை,
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

முடிவுத் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

— சுவாமி விவேகானந்தர் —

நம்மிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கையே நமக்கு ஒரு பெரிய உதவியாகும். இந்தத் தன்னம்பிக்கையை எங்கும் உபதேசித்து, செயல் முறையில் வளர்த்து வந்தால் நம்மிடையே உள்ள தீமைகளும் துயரங்களும் பெரும்பாலும் அழிந்துவிடும். மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும்போது ஆணோ பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு மற்ற எல்லாவற்றையும்விட முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை அங்கு ஓங்கி இருப்பதே என்பதைக் காணலாம். பிறந்ததிலிருந்தே, நான் சிறப்படையப் போகிறேன் என்ற எண்ணத்துடன் வாழ்பவன் சிறந்தவனாகிறான். ஒரு மனிதன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாழ்ந்த நிலைக்குச் சென்றாலும் திடீரென துணிச்சலுடன் மேலெழுந்து, தன்னம்பிக்கையுடன் திகழும் நேரம் ஒன்று வந்தே தீரும். ஆனால் முதன்முதலிலேயே இதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நமக்குத் தன்னம்பிக்கை வளர ஏன் இந்தக் கசப்பான அனுபவங்கள் எல்லாம் மனிதர்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகளுக்கெல்லாம் தன்னம்பிக்கையும் அது இல்லாதிருப்பதுமே காரணம் என்பதை அறியலாம். தன்னம்பிக்கை அனைத்தையும் சாதிக்க வல்லது. இதன் சிறப்பை என் வாழ்க்கையில் நானே உணர்ந்திருக்கின்றேன். எனக்கு வயது வளர வளரத் தன்னம்பிக்கை வளர்ந்தே வருகிறது. தன்னம்பிக்கையற்றவனே நாத்திகன். கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் பழங்கால மதங்கள் நாத்திகன் எனக் கூறி வந்தன. புது மதமோ தன்னம்பிக்கை அற்றவனே நாத்திகன் என்கிறது. ஆனால் இந்த நம்பிக்கை தன்னலத்தால் வந்ததாக இருக்கக் கூடாது. ஏனெனில் ஒருமையே வேதாந்தத்தின் கொள்கை. நீங்களே அனைத்துமாதலால் அனைத்திலும் நம்பிக்கை கொள்வதே இதன் பொருள். உங்களிடம் நீங்கள் அன்பு கொள்வதென்பது அனைத்திலும், அதாவது விலங்குகளிலும் மற்ற எல்லாவற்றிடமும் அன்பு கொள்வதே. ஏனெனில் அனைத்தும் ஒன்றே. இதுவே உலகைச் சிறக்கச் செய்யும் மேலான கொள்கை. நான் இதை உறுதியாக நம்புகிறேன். ''என்னைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும்'' என உறுதியாகக் கூற வல்லவனே மிகச் சிறந்தவன். உங்கள் உடலுக்குப் பின்னால் எவ்வளவு சக்தி, எத்தனை வகை ஆற்றல்கள் வேகங்கள் எல்லாம் மறைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? மனிதனிலுள்ள அனைத்தையும் அறிந்த விஞ்ஞானி யாராவது இருக்கிறார்களா? மனிதன் தோன்றி கோடிக் கணக்கான ஆண்டுகள் கழிந்துவிட்டன. எனினும் அவனது ஆற்றல்களில் மிகச் சிறிய பகுதியே வெளிப்படுத்தப் பட்டுள்ளது. எனவே பலவீனன் என்று உங்களைச் சொல்லிக் கொள்ளாதீர்கள். வெளிப்படையாகத் தோன்றும் இந்த இழிவுகளுக்கெல்லாம் அடிப்படையாக என்னென்ன சக்திகள் உள்ளன என்பது உங்களுக்கு எப்படித் தெரியும். உங்கள் ஆற்றலின் மிகச் சிறிய பகுதியையே நீங்கள் அறிந்துள்ளீர்கள். எல்லையற்ற ஆற்றலும் நல்வாழ்த்துக்களும் உங்களுள் கடல் போலுள்ளது.

சடப்பொருள் வலிமையானதென்றால் சிந்தனை எல்லாம் வல்லது. இந்தச் சிந்தனையை உங்கள் வாழ்க்கையில் உறுதிப் படுத்துங்கள். எல்லாம் வல்ல உங்கள் ஆற்றல் உங்கள் சிறப்பு, உங்கள் பெருமை இவை பற்றிய சிந்தனையால் உங்களை நிறையுங்கள், உங்கள் தலையில் குருட்டு நம்பிக்கை எதுவும் புகாதிருக்கக் கடவுள் அருள் புரியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதம்

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு எனது அன்பு செறிந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களின் வெளியீடான மலர்-3 இதழ்-2 என்னும் மாத இதழ் சஞ்சிகையைப் பெற்றேன். அவை ஒவ்வொரு பக்கமும் சமயக் கருத்துக்களை பொதிந்து வைத்தவையாகக் காணப்பட்டன. சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரை இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் காட்டும் வழி சமய தத்துவக் கருத்துக்கள் மற்றும் தங்களின் செய்திச்சரம், சம்பந்தரின் அற்புதங்கள் போன்ற நிகழ்ச்சிகளை வாசித்து அதன் உண்மைகளை திட்பநுட்பமாக அறிந்துகொண்டேன். இவ்வாறான நிகழ்ச்சிகளை நமது சமயத்துடன் ஒப்பிடுகையில் சமயம் சமுதாயம் போன்றன வளர்ச்சிபெற சிவநெறி ஒரு ஊன்றுகோல் எனலாம். ஆகவே தங்களின் இப்பணியை இடைவிடாது மேலும் சிவநெறியில் சமய சம்பந்தமான நிகழ்ச்சிகளைச் சேர்த்து தங்களின் சிவநெறிப் பயணத்தை என்றென்றும் தொடர்ந்து நிற்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**ந. லிங்கேஸ்வரன்**
ஸ்ரீசண்பக மகா வித்தியாலயம்,
ஈச்சிலம்பற்றை.

ஐயன்மீர்,

1994 தை, மாசி, பங்குனி காலாண்டு சிவநெறி சஞ்சிகை கிடைக்கப்பெற்றேன். மகிழ்ச்சி. சுவாமி விவேகானந்தரின் அட்டைப்படம் தாங்கி தனது இதழினுள் சுவாமி விவேகானந்தரின் கட்டுரை மலர் நன்றாக இருக்கின்றது. மாணவர்களின் அறிவு மேன்மை திறமையை புலப்படுத்தி ஊக்குவிக்கும் இது போன்ற நற்பணிகளை பாராட்டுகின்றேன் ''இந்து சமய செய்திக் கண்ணோட்டம்'' சமய உள்ளுணர்வு நடைமுறையின் நிறைவு குறைகளை சுட்டிக்காட்டி சரியான நடைமுறை இதுதான் என்பதை இச் சஞ்சிகை பகிரங்கம் செய்து பக்தர்கள் சைவத்தின் கருவினை தெளிவடைய வைக்க தங்கள் பணியை செவ்வனே செய்ய திருவருள் கிட்டும்.

**இரா யசோதரன்**
ஆரையம்பதி - 1
ஆரையம்பதி.

அன்பான சிவநெறி ஆசிரியர் அவர்களுக்கு!

இறைவன் நல்ல கருணை நினைவில் நினைத்து வாழும் ''திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை''யினருக்கும் அடியேன் உங்களிற்கு எழுதிக்கொள்வது,

இம்முறை இந்த ''சிவநெறி சஞ்சிகை'' ஆண்டு மலரில் சிறு சிறு புத்தக ஆய்வுரை வாசகர் கருத்து வேதம் கூறும் கதைகள் என்பவற்றை போல பல வகை சஞ்சிகைகளை பார்த்த போது எனக்கு அதில் கலந்துகொள்ளும் ஆர்வம் உண்டாகின்றது, இம்முறை ஆண்டு மலர் முத்திங்கள் ஏட்டினை நான் எவ்வாறு பெற்றுக்கொள்வது? எவ்வாறு பணம் செலுத்த வேண்டும்? என எனக்கு அறியத்தருவீர்களா?

**கோ. தமிழ்ச்செல்வி**
நடுப்பிரப்பந்திடல்
தம்பலகமம்.

ஆசிரியர் அவர்கட்கு!

தங்களின் சிவநெறி இதழ் கிடைக்கப்பெற்றேன். அனைத்துப் பக்க இதழ்களையும் ஆழமாக நுகர்ந்தேன். இனிமையிலும் இனிமை புதுமையிலும் புதுமை.

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரை நூற்றாண்டு நினைவு இதழ் நுகர்வுக்கு மேலும் சுவையூட்டின.

ஆசிரியரின் எண்ணம் அருமையிலும் அருமை இக்கால இந்து இளைஞர்களுக்கு இவ்வெண்ணப் பகுதி ஒரு உந்து சக்தியாக இருக்கும் என்பது எனது பணிவான கருத்தாகும் சுவாமி விவேகானந்தர் பற்றிய கட்டுரைப் போட்டியில் இடம்பெற்ற கட்டுரைகள் மிகவும் நன்றாக இருக்கின்றது. இது 'இக்காலகட்ட மாணவர்களுக்கு பேருதவி எனலாம். தி. மா. இ. இ. பேரவையின் செய்திச்சரம் செய்திக் கண்ணோட்டம் போன்றவற்றின் மூலம் பேரவை ஆற்றி வரும் சமய, சமூகப் பொருளாதாரப் பணிகளைப்பற்றி அறியக் கூடியதாயிருக்கின்றது. இப்பேரவையின் பணிகளை சைவ உலகம் என்றுமே மறக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.




மாணவர் உலகப் பகுதியில் திருஞானசம்பந்தர் மூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் எங்கள் ஞானியர் போன்ற அம்சங்கள் திரட்டிய முத்துக்களாகக் காணப்பட்டன. இக்கால கட்டத்தில் மாணவர்களுக்கென வெளிவரும் சமயப்புத்தகங்களில் கூட வெளிவராத முத்தான சொத்துக்களை திரட்டி வெளியிட்டிருந்தீர்கள். பேரவையின் அனைத்துச் சஞ்சிகைகளையும் தவறாமல் படித்து வருகின்றேன். இவ்விதழ் அனைத்திலும் நன்றாக இருக்கின்றது.


இது போன்ற நல்ல தரமான சஞ்சிகைகளை இனிமேலும் வெளியிட வேண்டும் என்றும் இவ்வாறான நல்ல அரும் பெரும் பணிகளை மேற்கொண்டு வரும் தி. மா. இ. இ. பேரவையினருக்கும் தரமான ஆக்கங்களை வெளியிடும் ஆசிரியர் அவர்கட்கும் அனைத்து வகைகளிலும் முன்னின்று பாரபட்சம் அற்ற முறையில் பணிசெய்து தன்னை உருக்கி மற்றவர்க்கு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியாகவும் நறுமணம் பரப்பும் ஊதுவர்த்தியாகவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டுடன் பொதுப்பணி செய்து வரும் தி. மா. இ. இ. பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள் சைவ மக்கள் அனைவருக்கும் தமது சமய சமூக பொருளாதாரப் பணிகளை எவ்வித இடையூறும் இன்றி தொடர வேண்டும் என எல்லாம் வல்ல கூத்தபிரானை வேண்டி நிற்கின்றேன்.

''நன்றி''

இவ்வண்ணம்
உண்மையுள்ள
கா. வடிவேல்
மத்திய வீதி
பட்டித்திடல்
தோப்பூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவநெறி வளர வாழ்த்துகின்றோம்"



# நலன் விரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும்
சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற
முதன்மையா ளைஞர்களின் அமைப்பே
தி ாவட்ட

# இதன் வளர்ச்சிக்குத் தாராளமாக
# உதவுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறி வளர வாழ்த்துகின்றோம்

...பலஸ்

**T. D. Y. M. H. A.**
**Fancy Palace**

தரமான பொருட்கள் குறைந்த விலையில் எம்மிடம் விற்பனைக்குண்டு

★ எவர் சில்வர் ★ பிளாஸ்டிக் ★ அலுமீனியம்
★ மங்களப் பொருட்கள் ★ சிறுவர், சிறுமியர் யுவதிகளுக்குகந்த மணிப் பொருட்கள்

● ஆலயங்களுக்குத் தேவையான மங்களப் பொருட்களும் பெற்றுக்கொள்ளலாம்

280, பிரதான வீதி,
திருக்கோணமலை.

280, MAIN STREET,
TRINCOMALEE.


ஒஸ்கா என்ர பிறைசர்ஸ் 98-பீ ரட்ணம் வீதி, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org